விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 27 சனிக்கிழமை (13.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## மகாவலி அபிவிருத்தி எனும் பெயரில்

# அபகரிக்கப்படுகிறது

# 1500 ஏக்கர் காணி!

(யாழ்ப்பாணம்)

*முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கரைத்துறைப்பற்று கொக்குத்தொடுவாய் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான 1500 ஏக்கர் வயற் காணிகள் மகாவலி அபிவிருத்தி திட்டம் என்னும் போர்வையில் அபகரிக்கப்பட்டு அப்பிரதேசத்தை சாராதவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.*

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி யுத்தகாலத்தில் தமது காணிகளை அல்லது ஆவணங்களை இழந்த மக்களுக்கு தீர்வை பெற்றுத்தருவதற்காக நடைபெறும் 2 வருட வேலைத்திட்டத்தின் இறுதி மாதமான இம்மாதத்தில் இது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் தமிழர்களுக்கு பாதகமான இரண்டு முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு உத்தரவிடப்

23ஆம் பக்கம் பார்க்க....

## பதுளையில் நிலநடுக்கம்

### 600 குடும்பங்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

பதுளை, ஹப்புத்தளை தம்பேதன்ன பிரதேசத்தில் உள்ள மவுசாக்கலை பெருந்தோட்டத்தின் சுமார் 600 தமிழ் தொழிலாளர் குடும்பங்கள் அவசரமாக சுமார் 6 கிலோ மீற்றருக்கு அப்பாலுக்கு புதுக்காடு என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நேற்று இரவு 7.45க்கும் 8 மணிக்கும் இடையில் குறித்த தோட்டத்தில் உள்ள சுமார் 10 லயன் குடியிருப்புகளின் கூரைகள் நிலநடுக்கத்தில் நடுங்குவதைப் போன்று சத்தத்துடன் நடுங்கியுள்ளன.

இதனையடுத்து குறித்த 10 லயன்களிலும் உள்ள சிறியவர் மற்றும் பெரியோர் என சுமார் 600க்கு மேற்பட்டவர்கள் வீடுகளில் இருந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவுக்காக அரச ஊடகங்கள் பிரசாரம் செய்ய கூடாது-தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்காக அரச ஊடகங்கள் பிரசாரம் செய்யக்கூடாது என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவிற்காக ஒளிபரப்புச் செய்யும் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி அலைவரிசைகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அரச ஊடகங்கள் பகிரங்கமாகவே ஜனாதிபதிக்கு பிரசாரம் செய்து வருவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் முறைப்பாடு செய்துள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் சுயாதீனமான முறையில் தேர்தலை நடத்த தடையாக அமையும்.

அரசியல் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்வதற்கு முன்னதாக என்னிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள

04ஆம் பக்கம் பார்க்க....

## மிருசுவில் தனியார் காணி சுவீகரிப்பு

## தடுத்து நிறுத்த கோரிய மனு நீதிமன்றால் விசாரணைக்கு ஏற்பு

(கொழும்பு)

கண்டி வீதியருகே மிருசுவில் பகுதியில் தனியாருக்கு சொந்தமான சுமார் 52 ஏக்கர் தென்னங்காணியை பலவந்தமாகக் கையகப்படுத்திய பின்னர், அதில் 52 ஆவது படையணியின் தலைமையகத்தை அமைத்துவிட்டு, பின்னர் தற்போது அந்தக் காணியை வலோற்காரமாக படைத்தரப்புக்கு எனச் சுவீகரிப்பதற்கு அரசுத் தரப்பில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையை ஆட்சேபித்தும், அதைத் தடுத்து நிறுத்தக் கோரியும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது. மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி, 52 ஆவது டிவிஷனின் கட்டளைத்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஊடக அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தியமையைக் கண்டித்து ஊடக அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஊடகவியலாளர்கள் மீது கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் ஊடக அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

கொழும்பு - கோட்டை ரயில்நிலையம் முன்பாக நேற்று பிற்பகல் இடம்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசிலிருந்து விலகுவேன்

### பிரதி அமைச்சர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு பொது பல சேனா ஆதரவு வழங்கினால், நான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகிடுவேன் என முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலில் யாரு

24ஆம் பக்கம் பார்க்க....

## விமானம் விபத்து

### இரு விமானி உட்பட நால்வர் பலி



(கொழும்பு)

கொழும்புக்கு வெளியே அத்துருகிரியவில் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை விமானப்படைக்கு சொந்தமான அன்டனோ - 32 ரக விமானமொன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த இரு விமானிகள் உட்பட 4 பேர் பலியானார்கள். மற்றுமொருவர் தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்

04ஆம் பக்கம் பார்க்க...

## பொது எதிரணிக்கு நேற்று ஏமாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இறுதி நாடாளுமன்ற அமர்வு நேற்று இடம்பெற்ற வேளையில் எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது

நேற்று ஆளும் தரப்பில் இருந்து எவரும் பொதுவேட்பாளர் தரப்புக்கு கட்சி மாறவில்லை.

நேற்று முன்தினம் குறைந்தது இரண்டு கட்சி மாறலாவது எதிர்பார்க்கப்பட்டது.

அதேநேரம் அரசாங்கம் நாடாளு

04ஆம் பக்கம் பார்க்க....

## இரணைமடுக்குளத்தை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் வழங்குவதாக இருந்தால் மாத்திரமே இரணைமடுக்குளத்தைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்றிருந்த நிலை மாற்றப்பட்டு, எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் இரணைமடுக்குள அணைக்கட்டைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி வழங்க முன்வந்திருப்பதாக வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல், உணவு வழங்கல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் குடிநீரில் கழிவு எண்ணெய் பரவியுள்ளமை தொடர்பான வாராந்தக் கூட்டம் நேற்று வெள்ளிகிழமை அவரது அலுவலகத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

கனடாவில் 2015 இல் 3 இலட்சம் பேருக்கு
நிரந்தர குடியுரிமை!
Express Entry Visa மூலம் 6 மாதத்தில் பயணம்
முழுமையான விபரங்களுக்கு பாருங்கள்
www.sikaram.lk
ஒரு க்ளிக்; உங்கள் வாழ்க்கையை மாற்றலாம்
rush@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் CVயை
அனுப்பி விண்ணப்பத் தகைமையை அறிந்து கொள்ளுங்கள்.
(த-9365)
SIKARAM
Education Abroad & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11

## ஐ.நா விசாரணைக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தல்

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போரில மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் நடத்தப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்திடம் பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் இடம்பெற்ற விவாதத்துக்குப் பதிலளித்து உரையாற்றிய போதே பிரித்தானிய வர்த்தக

04ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வாழ்க்கையில் வெறுப்பா ?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

(C-9351)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**021 222 8117, 0779008776**


# முன்பள்ளி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் ஸ்ரீ கணேச முன்பள்ளி மற்றும் சனசமூக நிலையத் தலைவர் ச.க. முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்வார். நீர்வேலி செல்லக் கதிர்காம தேவஸ்தானப் பிரதம குரு சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். (செ)


**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 190/-**

'சிவப்புகரு கூடிய முட்டை பெற்றுக் கொள்ளலாம்'

இப்போது கோழிப் பாகங்களும்
(Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்

**நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.**

**நிரந்தர தொழில்வாய்ப்பு**

சம்பளம் 18,000/= 30,000/= வயது:- 18 - 50 ஆண்/பெண்


**உடனடியாக தேவை**

கொழும்பை அண்மித்த பிரதேங்களில் ஜேம்/டொபி/
பிஸ்கட்/கோடியல்/கிளவுஸ்/பால்மா/சொக்லட்...
போன்ற கம்பனிகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல்,
களஞ்சியப் பிரிவுகளில் 250க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்.
உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்.
வருகை அன்றே வேலை.

(C-9346)

தொடர்புகளுக்கு: **0776838231/0771116770**


# நாவலர் விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் விழா நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் தமிழ்ச்சங்கத்தினர் வழங்கும் சிறப்புப் பட்டிமண்டபம், யாழ். பல்கலைக்கழக நடனத்துறையினர் வழங்கும் 'ஆறுமுகநாவலர்' நாட்டிய நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (செ)


1966.04.01 முதல் நாற்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாக
ஒப்புயர்வற்ற வைத்திய சேவையை ஆற்றியவரும்
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பத்தாண்டுகள்
அரும்பணியாற்றி ஓய்வுபெற்றவருமான 'கடவுள்' என
எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவருமான

வைத்திய கலாநிதி

உயர்திரு. **சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்**

அவர்களுக்கான

**பாராட்டு விழா**

இடம்: தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம்,
சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

காலம்: 2014.12.14 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணி

தலைமை: திரு.யோ.ஜெயக்குமார் அவர்கள்
(விழாக்குழுத் தலைவர்)

அனைவரையும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி (C-9349) விழா ஏற்பாட்டுக் குழு


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

### 2015ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல், மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 14.11.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைக்கமைவாக 2015 ஆம் ஆண்டு 01.01.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 18.12.2014 பி.ப 1.00 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 19.12.2014 பி.ப 12.00மணிவரை**
**கேள்விதிறக்கும் திகதி : 19.12.2014 பி.ப 2.00 மணிக்கு**

**2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை**

| சந்தைகள் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புநிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்ததொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|
| 1. **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.ஆனைக்கோட்டைச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 50000.00 | |
| 2. **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.இளவாலை பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 13750.00 | |
| 2.மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 16610.00 | 250.00 |

**2015 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1.மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1283888.00 | |
| 2.மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| 2. **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 200395.00 | |
| 2.ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 68985.00 | |
| 3. **பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1.மாகியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 59021.00 | |
| 2.மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 12540.00 | 250.00 |

**திரு.சி.சி.மகேந்திரன்**
**உப தவிசாளர்**
(சி-9353)

**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**
**11.12.2014**

## பருத்தித்துறை நகராட்சிமன்றம்

### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

**கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் கோரப்படுகின்றது**

01. கேள்வி பத்திரம் வழங்கப்படும் திகதி 12.12.2014 ஆம் திகதி தொடக்கம் 26.12.2014 திகதி பி.ப 3.00 மணிவரை

02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 29.12.2014 ஆம் திகதி 12.00 மணிவரை

03. கேள்வி திறக்கப்படும் திகதி 29.12.2014 பி.ப 2.00 மணி

04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

05.கேள்விப்பத்திரத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை **"நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புவதுடன் மறு பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

06. கேள்வி ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

**மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | மீளளிக்கப்படாத NBTவரி | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| | தட்டாதெரு கிளை (கலையந் தோட்டம்) ஒழுங்கை புனரமைப்பு | 7000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| | யாலப்பை வீதி புனரமைப்பு | 10000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| | கடற்கரை வீதி புனரமைப்பு மிகுதி வேலை | 7750.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |
| | 1-ம் கட்டை ஒழுங்கை கொங்கிறீற் றோட் அமைத்தல் | 14000.00 | 750.00 | 90.00 | 15.00 | C8 |
| | களஞ்சியசாலை (3-ம் தெரு) மேலதிக வாகன தரிப்பிடம் அமைத்தல் | 10000.00 | 750.00 | 90.00 | 15.00 | C9 |

**நகராட்சி அலுவலகம்**
**பருத்தித்துறை.**
**11.12.2014**

(சி-9356)

**தேசமானிய திரு.சபா.ரவீந்திரன் JPUM**
**நகரபிதா, நகராட்சிமன்றம்**
**பருத்தித்துறை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...



02

...மறுநாள் வீட்டில் அம்மா இல்லை என்று தெரிந்ததும், அம்மா எங்கே? அம்மாவைப் பார்க்கணும் என்று அழு தான். அன்று முதல் அவனு க்கு அம்மா என் மனைவி தான்.

அண்ணியிடம் ரொம்பவும் பாசமாக இருப்பான். வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வான். நான் வீட்டுக்கு வந்ததும் அவன் இருக்கிறானா என்று தான் முதலில் பார்ப்பேன். அவனைப் பார்க்காமல் ஒருநாள்கூட தூங்கியது கிடையசது.


தினமும் அவன் நண்பர்களுடன் சுற்றிவிட்டு லேட்டாகத்தான் வீட்டுக்கு வருவான். அது எனக்குப் பிடிக்காது. சத்தம் போடுவேன். சில சமயம் அடித்தும் இருக்கிறேன். ஆனால் அதையெல்லாம் அவன் பெரிதாக நினைக்கமாட்டான்.

உடனே சமாதானமாக என் பக்கத்தில் வந்து உட்காருவான். ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவோம். இவ்வாறு சத்தியநாராயணா குறிப்பிட்டுள்ளார்.

தாயார் பற்றி பிறகு ரஜினிகாந்த் கூறுகையில், அம்மா இறந்தபோது நான் விபரம் அறியாச் சிறுவனாக இருந்தேன். இப்போது எந்தத் தாயைப் பார்த்தாலும் எங்கம்மாவை நினைத்து ஏங்குகிறேன்.

அன்னை ஓர் ஆலயம் படத்தில் நான் நடித்தபோது அம்மா, நீ சுமந்த பிள்ளை என்ற பாடல் காட்சியில் நான் நிஜமாகவே என் அம்மாவை நினைத்து அழுதுவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சின்ன வயதில் முரட்டு சுபாவம் உள்ள வராக இருந்தார்.

நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவது, பெண்களை விரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டார். மகன், கல்லூரியில் படித்து பட்டம் பெற்று, பொலிசில் பெரிய அதிகாரியாக வேண்டும் என்பது ரஜினியின் தந்தை ஆசை. ஆனால், ரஜினிக்கு படிப் பில் நாட்டமில்லை. நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்.



### முரட்டுக்காளை

வாலிப வயதில் அடியெடுத்து வைக்கும்போது பருவத்தின் உந்துதலாலும் நண்பர்களின் பழக்கவழக்கங்களாலும் தவறு செய்வோர் பலர்.

மகாத்மா காந்திகூட தமது சுயசரிதையில் இதுபற்றி எழுதியிருக்கிறார். மாமிசம் சாப்பிட்டால் பலசாலி ஆகலாம் என்று என் நண்பர் சொன்னதைக் கேட்டு, நான் ரகசியமாக மாமிசம் சாப்பிட்டேன். பின்னர் அது தவறு என் பதை உணர்ந்து என்னை மன்னித்து விடும்படி தந்தைக்குக் கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு என் தந்தை கண்ணீர் வடித்தார். அந்தக் கண் ணீரில் என் பாவங்கள் கரைந்துவிட்டன என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டுள்ளார். ரஜினியின் இளமைப் பருவத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்தன. அரும்பிக் கொண்டிருந்த மீசை நன்றாக இருக்க வேண் டும் என்று கருதியமையினால் மீசை வரைந்து கொள்வார். சிகரெட் பிடிப்பார்.

இதுபற்றி எல்லாம் பேட்டிகளிலும் கட்டுரைகளிலும் ஒளிவு மறைவு இல்லாமல் ரஜினி எழுதியிருக்கிறார்.

ஒரு கட்டுரையில் அவர் கூறியி ருப்பதாவது:-

## ரஜினியின் இளமைப்பருவம்

பிஞ்சிலே பழுத்தது என் பார்களே, அது மாதிரி நான் வளர்ந்தேன். அந்த சின்ன வயதிலேயே தாங்க முடியாத உதையும் வாங்கியிருக்கிறேன். 16 வயதில் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் சேர்ந்தபோது இந்த அரகன்ஸ், முரட்டுத்தனம் கொஞ்சம் மட்டுப்பட்டன.

பிரேயர், பிராணயாமம் எல்லாம் செய்தபோது என் சுபாவங்கள் சற்று குறைந்தன. ஆனால், எஸ்.எஸ்.எல்.சி முடித்த பின் மீண்டும் மூத்த வயது நண்பர்கள் கிடைத்தார்கள்.

முரட்டுத் தனம் மறுபடியும் வந்துவிட்டது. முரட்டுத்தனம் என்றால் சண்டை மாத்திரம் அல்ல.

நீ ஒரு கிளாஸ் சாராயம் குடிப்பியா? நான் 6 கிளாஸ் சாராயம் குடிப்பேன் என்று சவால் விடுகிற முரட்டுத் தனம். மற்றவர்கள் பார்வையை நம்மீது திருப்ப வேண்டும் என்ற வெறி! இவ்வாறு ரஜினி கூறியுள்ளார்.

### பொலிஸ் பிடித்தது

ஒருமுறை, ஒரு பெண்ணை விரட்டிச் சென்றபோது, அவள் பொலிசிடம் புகார் செய்ய பொலிசார் ரஜினியையும் அவருடைய நண்பர்களையும் பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

ரஜினியின் தந்தை தலைமைப் பொலிஸ்காரர் என்பதையும் சிறந்த சேவை செய்ததற்காக அரசாங்க விருது பெற்றவர் என்பதையும் அறிந்து கொண்ட பொலிஸ் ரஜினியை விடுவித்து வீட்டில் கொண்டு போய் விட்டானர்.

(தொடரும்)

## மகிந்தவுக்...

முடியும்.

குறிப்பாக இரண்டு அரசாங்க தொலைக் காட்சி அலைவரிசைகளிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

அரச சொத்துக்கள் பாரியளவில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்கம் பயன்படுத்தி வருவதாக உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஆளும் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அரச அதிகாரிகள் பற்றிய தகவல்களை திரட்டி வழக்குத் தொடர எதிர்க்கட்சியினர் ஆயத்தமாகி வருகின்றனர் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான வகையில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்ய வேண்டாம் எனக் கோரி இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## விமானம்...

பட்டுள்ளார்.

நேற்று காலை 6.30 மணிளவில் கட்டுநாயக்கா விமானப்படை தளத்திலிருந்து இரத்மலானை விமானப்படைத்தளத்திற்கு புறப்பட்டு சில நிமிடங்களில் அத்துருகிரிய பகுதியிலுள்ள கோகந்த என்னுமிடத்திலுள்ள றப்பர் தோட்டமொன்றில் விழுந்து தீப்பற்றி எரிந்துள்ளது.

விமானமோட்டி விமானப்படைத்தள கட்டுப்பாட்டு பிரிவுடன் இறுதியாக தொடர்பு கொண்டபோது அதிக பனிமூட்டம் காணப்படுவதாக தெரிவித்திருந்ததாக விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

காட்சிகள் தெளிவின்மையே இந்த விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என்று சிவில் விமானப்போக்குவரத்து அதிகார வாரியம் கூறுகின்றது.

விமான விபத்து இடம் பெற்ற பகுதி மக்கள் குடியிருப்பு பிரதேசமாகவுள்ள போதிலும் குடியிருப்புகள் இல்லாத தோட்டமொன்றிலே விமானம் விழுந்து தீப்பற்றி எரிந்துள்ளது. சம்பவத்தில் ஒரு சில வீடுகளின் கூரைகள் சேதத்திற்குள்ளாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பாக விமானப்படை மற்றும் காவல்துறையினரால் தனித்தனி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விபத்து தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் பொது விமானப்படையின் பிரதான நிறைவேற்று அதிகாரி எயார் வயிஸ் மார்ஷல் ககன் புலத்சிங்கள இதனை அறிவித்துள்ளார். (செ-11)

## பொது எதிர...

மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும் என்று எதிர்க்கட்சியினர் எதிர்வுகூறியிருந்தனர்.

அதேநேரம் அரசாங்கமும் இரண்டு எதிர்க்கட்சியினர் தமது பக்கம் வரலாம் என்று எதிர்பார்த்தது. பாலித ரங்கே பண்டார மற்றும் ஜோன் அமரதுங்கவே அவர்களாவர்.

எனினும் இவை எவையும் நடக்கவில்லை. மாறாக அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கட்சியை சேர்ந்த அமீர் அலி நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.(செ-11)

## ஐ.நா விசார...

அமைச்சர் லிவிங்ஸ்டன் பிரபு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது பதிலுரையில் மேலும் தெரிவிக்கையில், பிரித்தானியா மற்றும் இலங்கையின் செழிப்புக்கு வர்த்தகம் என்பது முக்கியமான போதிலும்,

சுயாதீனமான வர்த்தக உறவுகளுக்கு செல்வதற்கு முன்பாக, மனிதவுரிமைகள் தொடர்பிலான கடப்பாடுகளும் எம்முன் உள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்துக்கு பிரித்தானியா ஆதரவு வழங்கியிருந்தது.

இலங்கை மீது கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம், நல்லிணக்கம் மற்றும் மனிதவுரிமைகள் நிலையில் முன்னேற்றத்தை எட்டும்படி இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்தது.

இத்தீர்மானம் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு ஆணை வழங்கியுள்ளது.

ஐ.நாவின் இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் படியும், இந்த விசாரணையில் சாட்சியம் அளிப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படியும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பில் தமது சொந்த ஆணைக்குழு பரிந்துரைத்தவைகளை நடைமுறைப்படுத்தும்படியும் நாம் இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் நீதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு, சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைக்கும்படி நாம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இத்தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுநலவாய மற்றும் சார்க் அமைப்பின் கண்காணிப்பாளர்களை அழைத்திருப்பதை நாம் வரவேற்கிறோம் என்று அவர் தனது பதிலுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் பலம் நீங்களே

“ சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள பிரச்சினைகளின் சிக்கல்தன்மையைப் பற்றிய புரிதல் அல்லது ஏற்றுக்கொள்ளல் இன்றி, உள்நோக்கங்கள் கொண்ட நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்துவதற்கான கருவியாக மனித உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. எங்கள் அனைவராலும் மனித உரிமைகள் ஒரு நன்னெறி, நன்னடத்தைக் கோட்பாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமே தவிர, அரசியல் கருவியாக அல்ல. ”

## பாதுகாப்பான தேசம்

## வளமான எதிர்காலம்

# தர்மபாலவின் குட்டிக் கதை

(யாழ்ப்பாணம்)

செங்கோல் உடைப்பு தொடர்பில் வட மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் தர்ம பால செனவிரத்ன ஏனைய மாகாண சபை உறுப்பினர்களுக்கு சிறுகதை யொன்று கூறி யுள்ளார்.

மாகாண சபையின் மாதாந்த அமர்வின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் இக்கதையை கூறியுள்ளார்.

ஒரு இடத்தில் இரு பிரிவினருக்கிடையே தினமும் சண்டை. அச் சண்டை ஒரு நாள் பலத்த பெரிய சண்டையாக மாறியது.


அங்கிருந்த ஒருவர் மற்றவருக்கு தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இதனால் கோபமடைந்த அவர் தன்னை தகாத வார்த்தையினால் பேசியவருக்கு எதிராக பொலிஸ்நிலைத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் தகாத வார்த்தைகளால் பேசியவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த நபரை விசாரணை செய்த நீதவான் தகாத வார்த்தை பிரயோகத்திற்கு 500 ரூபா தண்டம் என தீர்ப்பளித்தார்.

தீர்ப்பினை கேட்ட நபர் யாரை பேசினாலும் 500 ரூபா தான் அபராதமா? என கேட்டு நீதவானையும் தகாத வார்த்தையினால் பேசி விட்டு மொத்தமாக ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்தினார் எனக் கூறி தனது கதையினை முடித்துக் கொண்ட அவர் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினை காலையும் மாலையும் கடவுளை வணங்குமாறு அட்வைஸ்சும் வழங்கினார். (இ-4)




# சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் ஆறுமுகநாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும் சைவ வினாவிடைப் பரீட்சை பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் குருபூசையைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு நடத்தப் பட்ட சைவ வினாவிடை பரீட்சை பரிசளிப்பு விழாவும் இடம் பெறவுள்ளது. இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவுக்கு ஓய்வுநிலை அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தரும் சைவபரிபாலன சபை உப செயலருமானதிமாணிக்கவாசகர்முதன்மைவிருந்தினராக கலந்து கொண்டு சைவ வினாவிடைப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் களையும் சான்றிதழ்களையும்வழங்க வுள்ளார்.

சைவவினாவிடைப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**தரம் 1**

கு.யுகானா (யா/சுன்னாகம் கதிரமலைச் சிவன் அறநெறிப் பாடசாலை), ம.திகழ்ஒளிபவன் (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சி.ஸ்ருதி (கோண் டாவில் கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை)

**தரம் 2**

ச.அபிஷாயினி (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ஜெ.அக்ஷயா (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), தி.றஜீவன் (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்)

**தரம் 3**

ஸ்ரீ.றமேஷ் (கோண்டாவில் கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை), கி.ஆர்த்திகா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), சி.பிரணவன் (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

**தரம் 4**

அ.விசாகன் (யா/வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெ.புவியரசன் (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ப.விஷ்ணுஜன் (யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

**தரம் 5**

ம.கிருஷ்ணவி (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), த.கயூரி (யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சூ. ஆதிரை (மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை) (இ-5)

# வடக்கு மாகாண சபையின் பட்ஜெட்டில் ஆளுநர் சந்திரசிறிக்கும் நிதி ஒதுக்கீடு

## உறுப்பினர்கள் கடும் விசனம்

**வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநருக்கும் நிதியொதுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளமையினால் உறுப்பினர்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.**

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர்கள்மாகாண சபை உறுப்பினர்களிற்கிடையிலான சந்திப்பொன்று சுன்னாகம் பிரதேச சபையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போதே வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்தில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கும் நிதி யொதுக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஆளுநருக்கு 60 இலட்சம் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 2014 ஆம் ஆண்டிற்கான மாகாணசபையின் வரவு செலவுத்திட்டத்திலும் ஆளுநருக்கென நிதியொதுக்கப்பட்டுள்ளது.

மாகாணசபையின்நிதியிலிருந்து ஆளுநருக்கு நிதியொதுக்கப்பட்டமை தொடர்பில் மாகாண சபை யின் உறுப்பினர்கள்பெரும்பாலானோருக்கு தெரியப்படுத்தப்படவுமில்லை.

கிழக்கு மாகாண சபையில் இந்நடைமுறையில்லாத போதிலும் வடக்கு மாகாண சபை ஏன் ஆளுநருக்கு நிதியொதுக்குகின்றது என உறுப்பினர்கள் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பதிலளித்த முதலமைச்சர், இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஆளுநருக்கு நிதி யொதுக்கப்பட்டுவிட்டதாகவும் அடுத்த வருடவரவுசெலவுத்திட்டத்தில்அதனை நிறுத்த முடியாது எனவும் காலப் போக்கில் அவற்றினை படிப்படியாக குறைத்து நிறுத்த முடியும் என தெரிவித்தார்.


மாகாண சபை உறுப்பினர்களிற்கு தலா 60 இலட்சம் ரூபாவும் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சருக்கும் தலா 60 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஆளுநருக்கு எவ்வாறு 60 இலட்சம் ஒதுக்கப்படமுடியும்.

அரச உத்தியோகத்தரான ஆளுநருக்கு மாகாண சபை நிதியொதுக்கத்தேவையில்லையென்றும் ஆளுநர் அரசியல்வாதியல்ல. ஆகையினால் இந்நிதியொதுக்கீட்டினை மாகாண சபை அடுத்தாண்டு வரவு செலவுத்திட்டத்தில்நீக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நீக்கப்படாவிட்டால் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தினை எதிர்க்கப்போவதாக உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்ததோடு 27 மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)







யாழ். பல்கலைக்கழக திட்டமிடல்துறை மாணவர்களின் உலக நகர திட்டமிடல் தினத்தை முன்னிட்டு கண்காட்சியொன்றினை நடத்தி வருகின்றனர். இக்கண்காட்சியினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆரம்பித்து வைப்பதனையும் கண்காட்சியினை மாணவர்கள் உட்பட அனைவரும் பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம். இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-உ.சாளின்)

# பரிசுத்தினமும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வள்ளுவன் சனசமூக நிலைய ஆதரவுடன் இயங்கும் வள்ளுவன் முன்பள்ளியின் 22 ஆவது பரிசுத்தினமும் கலை நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். வண்ணார்பண்ணையிலுள்ள நிலைய அரங்கில் இடம்பெறவுள்ளது. (இ

# சைவப்புலவர் பரீட்சைக்குரிய விண்ணப்ப திகதி 20 வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் சைவப் புலவர் இளம் சைவப்புலவர் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி எதிர்வரும் 20 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.விண்ணப்பப் படிவங்களை இலங்கை சைவப்புலவர் சங்கம், 153, காங்கேசன்துறைவீதி, கொக்குவிலில் பெறமுடியும் .

மேலதிக விபரங்களுக்கு 0776 132176 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்க செயலாளர் செ.கந்த சத்தியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடித்ததில் நைஜீரியாவில் 40பேர் சம்பவ இடத்தில் உயிரிழப்பு!

நைஜீரியா ஜோஸ் நகரில் உள்ள பேருந்து நிலையம் அருகே நேற்று முன்தினம் மாலை குண்டு வெடித்தது. அதனை தொடர்ந்து அதே பகுதியில் சந்தை நடைபெறும் இடத்தில் குண்டு வெடித்தது. இந்த இரண்டு குண்டு வெடிப்புகளிலும் அப்பாவி பொதுமக்கள் 40 பேர் பலியானார்கள். அந்த இடம் முழுவதும் மரண ஓலங்களாக காணப்பட்டது. குண்டு வெடித்து படுகாயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சில பேர் கவலை கிடமாக உள்ளதாக நைஜீரியாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மே மாதம் இதே பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 118 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த குண்டு வெடிப்பு குறித்து உடனடி தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. நைஜீரிய பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நைஜீரியாவின் மேற்குபகுதிகளை கைப்பற்றி உள்ள போகாஹறாம் தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தி இருக்கலாம் என் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். ஆனால் இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு எந்த இயக்கமும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பொதுக் கூட்டம்


இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர் சங்க வடமாகாண பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண காப்புறுதி கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறும் இதுவரை அங்கத்தவராக சேர்ந்து கொள்ளாதவர்கள் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உறுப்புரிமையை பெறலாம் எனவும் சங்க செயலாளர் நா.சிவநாதன் தெரிவித்துள்ளார். (இ-5)


FWC

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 28.12.2014 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு தொண்டைமானாறு, வெளிக்கள நிலைய மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர் (8733)





## இராசி பலன்

13.12.2014
(கார்த்திகை 27, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 6.13 மணிக்கு
சப்தமி பின்னிரவு - 4.04 மணிவரை
மகம் முற்பகல் -11.37 மணிவரை
இராகுகாலம் 9.20-10.50 மணிவரை
சுபநேரம் 3.20-4.50 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்துசேரலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் , புகழும் கிடைக்கும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சகோதர ஒத்துழைப்புகள் அதிகரிக்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**கடகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், உங்கள் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தேக நலனுண்டு.

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கை கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்:** திடீர் பணவரவுகள் மனதிற்கு மகிழ்ச்சி தரும்,பெருமையான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், [illegible] தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சாதுரியமாக பேசி சாதனை படைக்கும் நாள், புதிய திட்டங்களில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்:** நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், நினைத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நன்மை தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாய் மதமான இந்து மதத்திற்கு திரும்புவதை மதம் மாற்றுகிறோம் என எப்படி கூற முடியும்?

**(புதுடில்லி)**

**நாட்டில் மத நல்லிணக்கத்தை பாதுகாப்பதே அரசின் முக்கிய குறிக்கோள் என்றும் மாநில அரசுகள் கேட்டுக் கொண்டால் இது தொடர்பாக உதவ மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் தாய் மதமான இந்து மதத்திற்கே வேற்று மதத்தவர்கள் மீளத் திரும்பி வருகின்றனர் எனவும் மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.**

ஆக்ராவில் நடந்த கட்டாய மதமாற்றம் தொடர்பாக, லோக் சபாவில் நேற்று முன்தினம் விவாதம் நடந்தது. இந்த விவாதத்திற்கு பதிலளித்து மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு பேசினார். அவர் தனது பதிலில் மத மாற்றம் குறித்து நாங்கள் கடந்த 50 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். இதுவரை ஆட்சியில் இருந்த காங்கிரஸ் இது தொடர்பாக செய்தது என்ன? மத மாற்றத்தை பாஜகவும் மத்திய அரசும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இதனைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஆனால் அரசு மீது களங்கம் கற்பிக்க ஆக்ரா சம்பவத்தை எதிர்க்கட்சியினர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர். இதனை நிறுத்திக்கொள்ள வேண்டும். அங்கு நிலைமை அமைதியாக இருக்கின்றது. எனவே இவ்விடயத்தை அரசியலாக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். பிரதமர் மோடி நாட்டின் வளர்ச்சியே தமது நோக்கம் என கூறியுள்ளார். இது காங்கிரஸ் ஆட்சியில் இல்லாமல் இருந்தது. ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்பது அம்மாநில அதிகாரத்திற்குட்பட்டது. எனவே இது தொடர்பாக உத்தர பிரதேச அரசை குறை கூற விரும்பவில்லை. சமீபகாலத்தில் மத மோதல்கள் குறைந்துள்ளது. இந்நேரத்தில் தவறாக நாட்டிற்கு தகவல்கள் பரப்பக் கூடாது.

## மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு கேள்வி

நாட்டில் மத நல்லிணக்கத்தை பாதுகாப்பதே அரசின் முக்கிய குறிக்கோள். மாநில அரசுகள் கேட்டுக்கொண்டால், இது தொடர்பாக உதவ மத்திய அரசு தயாராக இருக்கிறது. ஜனநாயகத்திற்கு எதிர்க்கட்சியினர் மதிப்பளிப்பதில்லை. காந்தியின் கொள்கைகளை நாங்கள் மதிக்கிறோம். சுதந்திரம் கிடைத்த பின் காங்கிரசை கலைத்து விட வேண்டும் என காந்தி கூறினார். அதை காங்கிரசார் பின்பற்றவில்லை.

மதச்சார்பின்மை என கூறிக் கொள்ளும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் தங்கள் மத சடங்குகளை செய்ததற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது. இதற்காக அவர்களை நான் குறை கூறவில்லை. எதிர்க்கட்சிகளைப் போன்று, மதச்சார்பின்மை என பேசிக் கொண்டு, மதங்களை ஆராதிப்பதற்கு பதிலாக, நாங்கள் எங்கள் நிலையை பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




## 25ம் திகதி மாபெரும் மதமாற்ற நிகழ்ச்சி

"இந்து மதத்தில் இருந்து மற்ற மதங்களுக்கு மாறியவர்களை மீண்டும் இந்து மதத்தில் சேர்க்கும் மிகப் பெரிய மதமாற்ற நிகழ்ச்சி வரும் 25ஆம் திகதி அலிகரில் உள்ள மகேஸ்வரி கல்லூரியில் நடைபெறும். இது மதமாற்றம் இல்லை. மீண்டும் தனது சொந்த மதத்துக்கு அவர்கள் திரும்புகிறார்கள். இது கட்டாயப்படுத்தி நடத்தப்படுவதல்ல. மக்கள் அவர்களுடைய சொந்த விருப்பத்தின்பேரில், அமைதியான முறையில், தங்களுடைய உண்மையான மதத்துக்கு திரும்புகின்றனர்"

# இந்திய மீனவர்கள் 50பேர் பாகிஸ்தானில் சிறைபிடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடற்படையினர் நேற்று இந்திய மீனவர்கள் 50 பேரை சிறைப்பிடித்துள்ளது அதே வேளை மீனவர்கள் பயணித்த 10 படகுகளையும் பிடித்து கொண்டது.

பாகிஸ்தான் எல்லை பகுதிக்கு சென்ற இந்திய மீனவர்கள் 50 பேரையும் அவர்கள் படகுகள் 10 க்கும் பாகிஸ்தான் கடற்படை சிறை பிடித்து உள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் பாகிஸ்தான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் மீது பாகிஸ்தான் பொலிஸ் எல்லையில் அத்துமீறி நுழைந்ததாக பாகிஸ்தான் வழக்கு பதிவு செய்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் சார்க் மாநாடு நடைபெறும் போது பாகிஸ்தான் 35 மீனவர்களை விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்துவாக மாறினால் 5இலட்சம் ரூபாய் அன்பளிப்பு இந்து மத அமைப்பு வெளியிட்ட கடிதத்தால் பரபரப்பு

உத்தரப்பிரதேசத்தின் மேற்கு பகுதியில் 'தரம் ஜக்ரன் சமிதி' என்ற இந்து அமைப்பு செயற்படுகிறது. இந்த அமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட கடிதம் உத்தரப்பிரதேச மாநிலத்தின் பல இடங்களில் விநியோகிக்கப்பட்டது.

அதில் இந்துவாக மாறும் கிறிஸ்தவருக்கு ரூ.2 இலட்சமும், முஸ்லிம்க்கு ரூ. 5 இலட்சமும் அன்பளிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடிதத்தில் திகதி இல்லை. இந்து அமைப்பின் நிர்வாகி ராஜேஸ்வர் சிங் பெயரும், தொலை பேசி எண்ணும் இருந்தது. இந்துக்களாக இருந்து பிற மதத்திற்கு சென்றவர்கள் மீண்டும் தங்கள் சொந்த மதத்துக்கு திரும்பும் நிகழ்ச்சி அலிகாரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாநிலத்தின் 20 மாவட்டங்களில் இருந்து 40,000 பேர் இந்து மதத்துக்கு திரும்பும் நிகழ்ச்சி நடை பெறும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த கடிதம் மேற்கு உத்தர பிரதேசம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டது. மேலும் மத கலவரத்தால் பாதிக்கப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்பிய முசாபர் நகரிலும் விநியோகிக்கப்பட்டது.

இதுபற்றி ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரிடம் கேட்டபோது, "நாங்கள் இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஆண்டு தோறும் நடத்தி வருகிறோம். தற்போது ஊடகங்கள் தான் ஆக்ராவில் நடந்த நிகழ்ச்சியைப் போல் இந்த கடிதத்தையும் பெரிதுப்படுத்துகின்றன.

நாங்கள் இதுபோன்ற முகாம்களை வெளியே தெரியாமல் நடத்தி வருகிறோம் என்றனர். இந்த கடிதம் உ.பி.யில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு உள்ளூர் முஸ்லிம் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதில் மத்திய அரசு இதை மத திட்டமா? அல்லது வளர்ச்சி திட்டமா? என விளக்க வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகளை முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். ஜனவரி 18ஆம் திகதி விஸ்வ இந்து அமைப்பு ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியையும் தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளன. (இ-5)

# இந்தியாவில் மேலும் 12 அணு உலைகள் மோடி-புடின் சந்திப்பில் 20 ஒப்பந்தங்கள்

2035ஆம் ஆண்டுக்குள் ரஷ்ய உதவியுடன் இந்தியாவில் மேலும் 12 அணு உலைகள் அமைக்கப்பட உள்ளன. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பின்போது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பெற்றோல், எரிவாயு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே மொத்தம் 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இரண்டு நாள் பயணமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் டில்லி வந்துள்ளார். நேற்று முன்தினம் அவர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இரு தலைவர்களும் சுமார் மூன்றரை மணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

இதன்பின் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறுகையில்,

இந்தியாவை தாங்கும் தூண்களில் ஒன்றாக ரஷ்யா விளங்குகிறது.



கடந்தகால வரலாற்றை திரும்பி பார்த்தால் இக்கட்டான நேரங்களில் இந்தியாவுக்கு பக்கபலமாக நின்று ரஷ்யா உதவி செய்துள்ளது. அன்று முதல் இன்றுவரை இந்தியாவுக்கு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. தீவிரவாதத்தை கட்டுப்படுத்து வதில் இருநாடுகளும் இணைந்து பணியாற்றும்.

ஆப்கானிஸ்தானில் அமைதி, ஸ்திரமான அரசை ஏற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் வளர்ச்சி, அமைதி நிலவ இருநாடுகளும் கைகோர்த்து செயற்படும்.

ரஷ்ய உதவியுடன் வரும 2035 ஆம் ஆண்டுக்குள் மேலும் 12 அணு உலைகள் அமைக்கப்பட உள்ளன. இந்த அணுஉலைகள் உலகத் தரத்தில் அமைக்கப்படும். அணு உலைக்கு தேவையான பாகங்கள் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும்.

பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக ரஷ்யா விளங்குகிறது. ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட ஐஎன்எஸ் விக்ரமாதித்யா போர்க் கப்பல் நமது கடற்படையின் வலிமையை பறைசாற்றுகிறது.

'மேக் இன் இந்தியா' திட்டத்தை மத்திய அரசு தீவிரமாக செயற்படுத்தி வருகிறது. இதற்கு ரஷ்யா முழு ஆதரவு அளித்துள்ளது. இதன்படி ரஷ்ய உதவியுடன் அதிநவீன ஹெலிகொப்டர்களை இந்தியாவில் தயாரிக்க ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஹெலிகொப்டர்கள் ராணுவ மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும். இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஹெலிகொப்டர்களை ஏற்றுமதி செய்யவும் பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன.

இருநாட்டு கூட்டு முயற்சியில் ஏற்கனவே பிரம்மோஸ் ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது போர் விமானம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இருநாட்டு இராணுவமும் இணைந்து போர் பயிற்சி நடத்தவும் பரஸ்பரம் இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. பாதுகாப்புத் துறையில் இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து பணியாற்றும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்கதிர்கள்மீது வண்ணத்துப் பூச்சிகளின் தாக்கம்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் காணிகளில் நெற்கதிர்மீது சிறிய வகையாக வண்ணத்துப் பூச்சிகளின் தாக்கம் பெருமளவில் அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பூச்சிகளின் தாக்கமானது பெரியகுளம், புளியம்பொக்கணை, கண்டாவளை ஆகிய கிராமங்களில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ள வயல் காணிகளில் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகளால் தெரி விக்கப்படுகின்றது.

குறித்த பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த கமநலசேவை நிலையத்தினரால் சிபார்சு செய்யப்பட்ட கிருமி நாசினிகளை விசுறுகின்றபோது அவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாது உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.



கடந்த காலங்களை விட இவ்வருடம் இப்பூச்சிகளின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால் நெற்பயிர்கள் செழிப்பின்றி இருப்பதாக அவர்கள் கவலை கொள்கின்றனர்.

இந்த வண்ணத்துப் பூச்சிகளின் தாக்கத்தினால் நெற்பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் கதிர்களில் காணப்படும் நெல் மணி களின் விளைச்சல் குறைவாகவே இருக்குமென விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நெற் கதிர்கள் பலம் குன்றிய நிலையில் காணப்படுவதால் தாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாது போகுமென அவர்கள் கூறுகின்றனர்.

எனவே இப்பூச்சித் தாக்கத்தில் இருந்து நெற் பயிர்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் அவ்விடங்களுக்கு வருகைதந்து இதனைக் கட்டுப்படுத்த ஆலோசனைகளை வழங்க வேண்டும் எனபாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரி க்கை விடுக்கின்றனர். (2-263)




# ஷெல்குண்டு சிதல்களுடன் வாழும் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவி

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களாலும் ஷெல் தாக்குதல்களாலும் காலை இழந்த மகனுடனும், நெஞ்சிலே ஷெல் துண்டுகளைச் சுமந்து துன்பமுறும் மகளுடனும் வாழ்ந்து வரும் வவுனியா, கட்டையர் குளம், சாஸ்திரிகூழாங் குளத்தைச் சேர்ந்த இ.காந்திநாதன் குடும்பத்தின் சுய தொழில் விருத்திக்காக வட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா ஒரு தொகைப் பணத்தை வழங்கியுள்ளார்.

இந்நிதியின் மூலம் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நல்லின கறவைப் பசு மாடு கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இக் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக இந் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கால கொடூர யுத்தம் வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை முடக்குவதில் முக்கிய

# பெயர்ப்பலகைகளில் மும்மொழி பயன்பாட்டை பிரகடனப்படுத்துக!

### மன்னார் மாவட்ட மொழிச்சங்கங்களின் ஒன்றியத்தால் மகஜர் கையளிப்பு

(மன்னார்)


சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் மன்னார் மாவட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட மொழிச் சங்கங்களின் ஒன்றியத்தால் மும்மொழி அமுலாக்கல் தொடர்பான மனு கையளிப்பு நிகழ்வு, மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபை தலைவர்களுக்கு கடந்த 10 ஆம் திகதி மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தங்கள் நிர்வாக பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் அரச மற்றும் தனியார், பொது நிலையங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் வியாபார நிலையங்களுக்கு இடப்படும் பெயர் பலகைகளில் மும்மொழிப் பயன்பாட்டை மேற்கொள்ள ஆலோசனை வழங்குமாறு, வேண்டுகோளொன்றை முன்வைக்கின்றோம்.

இவ் வேண்டுகோளானது அரசகரும மொழிகள் ஆணைக்குழு விதந்துரைத்துள்ள 1991/8ஆம் இலக்க சட்டத்தின் அரசியல் அமைப்பின் VIஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளை மேற்கோள் காட்டியே இவ் வேண்டுகோள் முன்வைக்கப்படுகிறது என்பதை நாம் பிரகடனப்படுத்துகிறோம்.

அத்துடன் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் நிமிர்த்தம் தாங்கள் ஏற்படுத்தக்கூடிய துணை விதிகள் என்ற பிரமாணத்தில் எதிர்கால சமூக ஒற்றுமை மற்றும் ஒன்றுபட்ட பல்லினத் தேசியம் என்பதற்கு வலுவூட்டும் தங்களுக்கு இவ் வேண்டுகோளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)



காவேரி கலாமன்றம் தயாரிப்பில் வண.கலாநிதி ரி.எஸ் யேசுவாவின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் வெளியாகிய **சத்திய ஜனனம்** கிறிஸ்து பிறப்பு நாட்டுக்கூத்து 12 வருடங்களாக மேடையேற்றப்பட்டு வருகின்றது. இம்முறை கடந்த 10 ஆம் திகதி 28 ஆவது தடவையாக மேடையேறியது. கிளிநொச்சியின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் இந் நாட்டுக் கூத்தினை வந்து கண்டு களித்ததை படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# மக்களின் கடுமையான உழைப்பின்றி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் பல உதவிகளைப் பெற்று மக்களின் வாழ்நிலை மேம்பாட்டிற்கு பயன்படுத்த முடியும். இந்த உதவிகளுக்கு பின்னால் மக்களின் கடுமையான உழைப்பு அவசியம். உழைப்பின்றி உதவியின் பயனைப் பெற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு பாராளுமனற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கந்தபுரம், கண்ணகிநகர், அக்கராயன், வன்னேரிக்குளம், கோணாவில் கிராமங்களைச் சேர்ந்த 78 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் வாழ்வாதார உதவியாக நல்லின மாடுகள், கோழிகள் என்பவற்றை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை முதற்தடவையாக ஒரு குறுகிய காலத்திற்குள் பெருமளவு நிதி வாழ்வாதாரத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் நல்லின கால் நடைகளுக்காக 400 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அவை பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டும் உள்ளது. எங்கள் மாவட்டத்தை பொறுத்தவரை இது முன்னேற்றகரமான நிகழ்வு. தனியே வாழ்வாதார மேம்பாடு மட்டுமன்றி ஒரு ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கும் இது வழி சமைக்கும்.

இவ்வாறு மக்களுக்காக உழைக்கின்றவர்களை மக்கள் பலப்படுத்துகின்ற போது எதிர்காலத்தில் மேலும் பல உதவிகளுக்கு பல மில்லியன் ரூபாயகளை பெற்று மக்களின் வாழ்நிலை மேம்பாட்டிற்கு பயன்படுத்த முடியும்.

மேலும் இந்த உதவிகளுக்கு பின்னால் மக்களின் கடுமையான உழைப்பு அவசியம். உழைப்பின்றி உதவியின் பயனை பெற்றுக் கொள்ள முடியாது. எங்களால் மக்களுக்கான உதவிகளை பெற்றுக்கொடுக்க முடியும். அதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் உத்தியோகத்தர்கள் வழங்குவார்கள். இவற்றோடு பயனாளிகளின் உழைப்பும் சேர்கின்ற போது பயன் என்பது இலகுவாகிவிடும்.

நாம் தொடர்ந்து மக்களின் முன்னேற்றத்திற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம். முக்கியமாக எதிர்வரும் ஆண்டு கோணாவில் ஸ்கந்தபுரம் வீதியினை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.




கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சபாநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கால்நடை சுகாதார திணைக்கள பிரதி பணிப்பாளர் கௌரிதிலகன், கிளிநொச்சி கால்நடை மருத்துவர் திருமதி றேனுகா, வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தி சாதுரியம் மிக்க கொக்கு



ஒரு குளக்கரையில் ஒரு கொக்கு இருந்தது.

அது ஒரு கிழட்டுக் கொக்கு.

சிரமமில்லாமல் மீன்களைப் பிடித்துத் தின்பதற்கு என்ன வழி என்று அது யோசித்தது.

குளக்கரையருகில் போய் நின்று கொண்டது.

கிட்ட நெருங்கிய மீன்களைக் கூட இது கொத்தாமலே இருந்தது.

மீன்களைத் தின்ன தனக்கு ஆசை எதுவும் இல்லாதது போல் பாசாங்கு செய்தது.

அந்த மீன்கள் மத்தியிலே ஒரு நண்டும் இருந்து வந்தது.

இது நெருங்கி வந்து மாமா! வழக்கத்திற்கு மாறாக எதையும் தின்னாமல், விளையாடாமல் இன்றைக்கு இருக்கிறீர்களே ஏன் என்று கேட்டது.

மீன்களைத் தின்கிறவரை நான் புஷ்டியாகவும் ஆரோக்கியமாகவும் இருந்து வந்தேன்.

உங்களை ருசி உங்களை ருசி பார்த்துச் சுகமாகக் காலம் கழித்து வந்தேன்.

ஆனால், உங்களுக்கெல்லாம் பேராபத்து ஒன்று வரப்போகிறது. அதனால் கிழப்பருவத்தில் என் சுகஜீவனத்துக்கும் கேடு வரும்.

அதை நினைந்து மனம் சோர்ந்து நிற்கிறேன் என்றது கொக்கு.

அதென்ன ஆபத்து மாமா? குளக்கரையோராமாய்ச் மீனவர்கள் பலபேர் பேசிக் கொண்டு போனதைக் கேட்டேன்.

இது பெரிய குளம்.

மீன்கள் நிறைய இருக்கின்றன. நாளைக்கோ மறு நாளைக்கோ வந்து வலை வீசுவோம்.

இன்றைக்கு நகரத்தின் அருகிலுள்ள ஏரிக்குப் போகலாம். என்று பேசிக் கொண்டார்கள்.

அதனால் நீங்களும் சாகப் போகிறீர்கள். நானும் உணவி ல்லாமல் சாகப் போகிறேன். அதை நினைக்க நினைக்க எனக்கு வருத்தமாயிருக்கிறது. சாப்பாட்டில் இன்று மனம் செல்லவில்லை என்றது கொக்கு.

அந்த வஞ்சகனின் சொற்க ளைக் கேட்டு ஜலராசிகள் எல்லாம் உயிருக்குப் பயந்து போயின.

எல்லோரும் கூடி, மாமா! அப்பா! அண்ணா! நண்பா! மதிவாணா! அபாயத்தைக் கேட்ட நீ உபாயமும் அறிந்திருப்பாய்.

சாவின் வாயிலிருந்து எங்க ளைக் காப்பாற்று! என்று கேட்டுக் கொண்டன.

நான் ஒரு பறவை. மனித னோடு என்னால் சண்டைபோட முடியாது. ஆனால், ஒன்று செய்ய முடியும்.

உங்களையெல்லாம் இந் தக் குளத்திலிருந்து வேறொரு ஆளங்காணாத குளத்துக்கு மாற்றிவிட முடியும் என்றது கொக்கு.

இந்தச் சாகஸப் பேச்சில் அவை எல்லாம் மதி மோசம் போய், மாமா! நண்பா! சுயநல மில்லாத பந்துவே! முதலில் என்னைக் கொண்டுபோ! இல்லை. என்னைக்கொண்டு போ! இந்தப் பழமொழியை நீ கேட்டதில்லையா?

தன்னல மறுப் புடன் உதவி செய்வதில் திடச்சித்த முடையவர்கள் எதற்கும் தயங்கமாட்டார்கள் உயிர் போனாலும் போகட்டும்.

நண்பனுக்கு நன்மை செய்தால் சரி என்று கருதுகின்றனர்.

என்று ஒரே சமயத்தில் நான் முந்தி, நீ முந்தி என்று கேட்டுக் கொள்ளத் தொடங்கின.

அதைக்கேட்டு, அந்தக் கிழட்டுப் போக்கிரி தனக்குள் சிரித்துக் கொண்டது. தன் மனதுக்குள்ளேயே, நம் புத்தி சாதுரியத்தால் மீன்கள் எல்லாம் நம் வசமாகி விட்டது.

இனி நிம்மதியாகச் சாப்பிட வேண்டியதுதான் என்று முடிவு செய்து கொண்டது.

அவை வேண்டிக் கொண்ட படி சபதம் செய்து, சில மீன்களை அலகால் தூக்கிக் கொண்டுகொஞ்ச தூரம் போய் ஒரு கற்பாறை மீது வைத்துச் சாப்பிட்டது. ஒவ்வொரு நாளும் இப்படி மீன்களைக் கொண்டு போவதிலே அதற்கு ஒரே கொண்டாட்டமும், திருப்தியுமாக இருந்தது.

மீன்களைப் பார்க்கும் போதெல்லாம் புதிய புதிய பொய்க ளைச் சொல்லி நம்ப வைத்து வந்தது.

மரண பயமடைந்த நண்டும் ஒருநாள் அதனையணுகி, மாமா என்னையும் சாவின் வாயிலிருந்த காப்பாற்றுங்கள் என்று வேண்டிக் கொண்டது. கொக்கு யோசிக்கத் தொடங்கியது. ஒரு மாதிரியான மீன் மாமிசம் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்து விட்டது. இந்த நண்டை ருசித்துப்பார்த்தாலென்ன? அபூர்வமாயிருக்கும். ஆனந்த மாயுமிருக்கும் என்று எண்ணம் கொண்டது. நண்டைத் தூக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறந்தது. நீர் நிலைகளையெல்லாம் விட்டு விட்டு வெய்யிலில் காய்ந்த பாறையை நோக்கி கொக்கு பறந்து செல்வதைக் கண்ட நண்டு மாமா! ஆழங்கானாத குளம் ஒன்று இருக்கிறது என்று சொன்னீர்களே, அது எங்கே? என்று கேட்டது.

கொக்கு சிரித்துக் கொண்டு அதோ, வெய்யிலில் காய்ந்த விசாலமான அந்தக் கற்பாறை தெரிகிறதா? எல்லா ஜீவராசிகளும் அங்கே தான் ஓய்வும் நிம்மதியும் கண்டன. இப்பொழுது நீயும் காணப்போகி றாய் என்றது.

நண்டு கீழே பார்த்தது. மீன்களின் எலும்புகள் மலைபோல் குவிந்து பலி பீடம்போல் காணப்பட்ட பயங்கரமான ஒரு பெரிய கற்பாறை தெரிந்தது. நண்டு உடனே யோசிக்கத் தொடங்கியது. ஐயையோ! மீன்கள் அனைத்தையும் தின்றுவிட்டிருக்கிறதே! அதே குவியல் குவியலாக அவற்றின் எலும்புகள் சுற்றிலும் கிடப்பது தெரிகிறதே! இந்த நிலைமையில் எது செய்தால் சரி? சரிதான் இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? எனவே, அங்கே என்னைக் கொண்டு போய் போடுவதற்கு முன்பே எனது நான்கு கூரிய கொடுக்குக்ளால் கொக்கின் கழுதைப் பிடித்துக் கொள்ளுகிறேன் என்று தீர்மானித்தது.

அப்படியே அதன் கழுத்தை நண்டு தனது கொடுக்குகளால் பற்றிக் கொண்டதும் கொக்கு தப்பிக்க முயற்சித்தது. இருந்தாலும் நண்டின் கொடுக்குகளிலிருந்து தப்பிக்க முடியாமல் தலை வெட்டுண்டு செத்தது.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2014
13

- 1577 - சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்திலிருந்து தனது உலகத்தைச் சுற்றிவரும் பயணத்தை ஆரம்பித்தார்.
- 1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந்தார்.
- 1888 - யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.
- 1949 - இஸ்ரேலின் சட்டசபை நாட்டின் தலைநகரை ஜெருசலேம் நகருக்கு மாற்ற முடிவெடுத்தது.
- 1959 - மக்காரியோஸ் சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1972 - அப்பல்லோ 17 விண்வெளி வீரர்கள் யூஜீன் செர்னன், ஹறிசன் ஸ்மித் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். 20ம் நூற்றாண்டில் சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.
- 1974 - மோல்ட்டா குடியரசானது.
- 1981 - போலந்தில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.
- 1996 - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கோஃபி அன்னான் தெரிவு செய்யப்பட்டார்.
- 2003 - முன்னாள் ஈராக் அரசுத் தலைவர் சதாம் உசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டார்.
- 2004 - முன்னாள் சிலி சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினோச்சே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 2006 - பாய்ஜீ என்ற சீன ஆற்று டொல்ஃபின் அருகிய இனமாக அறிவிக்கப்பட்டது.


பிறப்புகள்

- 1926 - செ. குப்புசாமி தொழிற்சங்கத் தலைவர் (இ. 2013)

இறப்புகள்

- 1557 - டார்ட்டாக்ளியா, இத்தாலியக் கணிதவியலாளர் (பி. 1499)
- 1944 - வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (பி. 1866)
- [illegible] எழுத்தாளர் (பி. 1932)
- [illegible] எழுத்தாளர் (பி. 1938)
- 2010 - ரிச்சர்ட் ஆல்புரூக், அமெரிக்கத் தூதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து – 19

...பெரியமூக்கி புருசன் துரைச்சாமி, சடையத்தேவருக்குச் சொந்த மச்சினன். மொதலக் கம்பட்டியில பெரியமூக்கியப் பெண்ணெடுத்துக் கூட்டிவாரப்ப வண்டி மாடு ஓட்டிட்டுக் கூடவே வந்தவன்தான் அவ அண்ணன் மகன் செயில்ராசு.

அவன் பெறக்கறப்ப அவன் அப்பன் செயில்ல இருந்ததுனாலே அவனுக்கு அந்தப் பட்டம்.

சக்கர வள்ளிக்கெழங்கு மூட்டையில சமயத்துல சாரப்பாம்புக் குட்டியும் சேர்ந்து வந்திருமா இல்லையா.. சக்கரவள்ளிக் கெழங்கு பெரியமூக்கி. சாரப்பாம்புக் குட்டி- செயல்ராசு.

ஊருக்கு வந்தன்னைக்கே செயில்ராசு ஆரம்பிச்சுட்டான் அவன் கிருத்திரியத்தை. மூணாம் நாளே ஊரு பூராத் தெரிஞ்சு போனான்.

மந்தையில அரசமரத்தடியிலயே காத்துக் குடிச்சுக் கெடக்குற கெழடு கட்டைகளுக்குப் பலகாரம் மிச்சரு அல்வான்னு பொட்டணம் பொட்டணமா வாங்கிக் குடுத்து மகராசன் நல்லாருக்கணுங்கிற நல்ல பேரு வாங்கிட்டான்.

பொதுக் கெணத்துல தண்ணியெடுக்க வார பொம்பளைகளுக்கெல்லாம் இவனே தண்ணியெறச்சு நெப்பி.. தூக்கி விடுற சாக்குல தொட்டும் அனுப்பினான்.

ஊருக்குள்ள யார் வீட்ல யாரிருக்கா; வீடுகள்ல என்னென்னா இருக்குன்னு சட்டையக் கழத்தி உருமாக்கட்டி நெஞ்சத் தூக்கி நடந்து தெருத்தெருவாத் திரிய ஆரம்பிச்சுட்டான்.

பொம்பளைக ரெண்டுபேரு ஒரல்ல



சோளம் போட்டு ஒலக்க குத்திக்கிட்டிருந்தாகன்னா- ஓடிப்போயி ரெண்டு பேரையும் ஒதுங்கி நிக்கச் சொல்லிட்டு ரெண்டு கையிலயும் ரெண்டு ஒலக்கைய வாங்கி இவனே மாத்தி மாத்திக் குத்தி பொடாச்சும் குடுத்திட்டுப் போயிருவான்.

யார் வீட்லயும் கூசாம நொழஞ்சு அம்மியில ஆறவச்சிருக்கிற களியில இவனாக் கொழம்ப அள்ளி ஊத்தித் தெனாவெட்டாத் திண்டுபிட்டு உப்போ ஒறப்போ கம்மின்னும் சொல்லிப் புட்டு வேட்டியில கையத் தொடச்சு வெளியேறிருவான்.

கல்யாணமாகாத மூத்த கொமரிகள... புருசன் வீட்லயிருந்து கோவிச்சிட்டு வந்து பெறந்த விட்ல பேன் பாத்துக்கிட்டிருக்கிற வாழாவெட்டிகள... சோங்கு பண்றதுல இவனுக்கொரு சொகம் இருக்கு. ஊருக்குள்ள ஒரு தும்பு திரிச்ச மாடு துள்ளிக்கிட்டுத் திரியுதே அத லேசாத் தட்டி வைங்கப்பான்னு வெடலப் பயக்கிட்ட ஊர்ப்பெருசுக சொல்ற அளவுக்கு அத்துமீறிப் போயிக்கிட்டிருக்கு அவன் அக்குறும்பு.

ஏம்மா பெரியமூக்கி! சொக்கத்தேவன் பட்டிக்கு வாக்கப்பட்டு வந்தவளே! ஒன் அண்ணன் மகனக் கொஞ்சம் தட்டி வைக்கக் கூடாதான்னு கேட்டதுக்கு ஆம்பளப் பயன்னா அப்படித்தான் இருப்பான்னு பெரும் போக்கா அவ சொல்லப்போக, அப்ப சொக்கத்தேவன்பட்டியலில் அம்பளப் பயலலே இல்லேன்றியான்னு சடையத்தேவர் வீட்டு ஆளுக கேக்க, அப்பவே கசமுசாவாகி அஞ்சாறு மாசமாப் பேச்சுவார்த்தை இல்ல ரெண்டு வீட்டுக்கும்.

ஒரு புராட்டாதி மாசம் அப்பவே அடிக்க ஆரம்பிச்சிருச்சு அடுத்த மாச மழைக்குண்டான சிறுகாத்து.

பொழுசாயநேரம்... வாரேன் வாரேங்குது இருட்டு. போறேன் போறேங்குது வெளிச்சம். மொதப்பறவை கூடு சேர்ந்திருச்சு. கடைசிப் பறவை இந்தா வந்திட்டேங்குது.

ஊருக்கு மேற்க கரட்டடிய ஒட்டியிருக்க கம்பங்காட்டுக்குள்ள செடி செத்தையப் பரப்பி அதுக்கு மேல சக்கரவள்ளிக் கெழங்கை அடுக்கி சோளத்தட்டைய மேல போட்டுச் சுட்டுத் திங்கத் தோது பண்ணிக்கிட்டிருக்கான் செயில்ராசு. *(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

# கவலைகள் இன்றி வாழ்தல்!

...**பா**ருங்கள்... இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் அவனது வாய் ஒன்றேதான். உங்களிடம் ஒரு அடிப்படை மாற்றம் நிகழவில்லையென்றால் உங்கள் வாழ்க்கையில் இந்த அளவு மாற்றம்தான் காணப்படும். எவ்வாறு அழகு பார்ப்பவனின் கண்களில் இருக்கிறதோ, அதேபோன்று சுவை அதை அனுபவிக்கும் நாவில் இருக்கிறது. உங்கள் மனநிலை உங்கள் வாழ்க்கையின் தரத்தை வரையறுக்கிறது.

பல சமயங்களில் மாற வேண்டிய தேவையை நாம் உணர்ந்தாலும் இருக்கும் நிலையிலேயே இருப்பது வசதியாக இருக்கிறது. மீண்டும் அதே சக்கரத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். நமது ஒரு பக்கம் நாம் மாற வேண்டிய தேவையைச் சொன்னாலும் இன்னொரு பக்கம் விழிப்பின்றி மீண்டும் பழக்கமான வடிவ அமைப்புகளிலேயே நழுவி விழுந்து விடுகிறது. நீங்கள் மாறுவதற்குப் பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டாலும் தற்சமயம் இருக்கும் நிலையையே சௌகரியமாக உணர்ந்து அவற்றைத் தவறவிட்டு விடுகிறீர்கள்.

இந்த மனநிலை உங்களைப் பொறுத்தவரை ஒரு திடமான உண்மையாகி விடுகிறது. நீங்கள் அதை வெறுமனே பரப்பிக்கொண்டிருக்கிறீர்கள்.

அதை மாற்ற முயற்சி செய்யுங்கள். நான் சொல்கிறேன்... நீங்கள் இது போன்ற திடமான மனநிலையுடன் வாழ்ந்தீர்களானால் அதில் இன்னொரு அபாயம் இருக்கிறது. உங்கள் குழந்தைகள் அதை உங்களிடமிருந்து கிரஹித்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.



எனக்கு ஒரு நகைச்சுவை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு கணவனும் மனைவியும் தொழில் முறை மகா திருடர்கள். அவர்கள் இருவரும் தங்களுக்கு ஒரு குழந்தை இருந்தால் அது எவ்வளவு வளமாக இருக்கும் என்று அடிக்கடி பேசிக் கொள்வார்கள். ஒரு குழந்தையும் பிறந்தது.

அது தனது வலது கையை இறுக்கமாக மூடியே வைத்திருந்தது. அவர்களால் அதை எவ்வளவு முயன்றும் திறக்க முடியவில்லை. அதை கவனிக்கும் டாக்டரும் எவ்வளவோ முயன்றார். இறுதியாகத் தனது தங்கச் சங்கிலியை அதன் கண் முன்னே ஆட்டினார். குழந்தை மெதுவாகத் தன் கையைத் திறந்தது. உள்ளே நர்ஸினுடைய தங்க மோதிரம்!

(பலத்த சிரிப்பு)

இது ஒரு நகைச்சுவை மட்டுமே. ஆனால் ஒரு பெற்றோராக உங்கள் குழந்தைகளுக்கு உங்கள் மனநிலையைக் கொடுத்துவிடக் கூடிய வாய்ப்புகள் மிக அதிகம் என்பதைப் புரிந்து

## ஆன்மீகம் 103

கொள்ளுங்கள். அதனால் ஒவ்வொரு கணமும் விழிப்புடன் உங்கள் விழிப்புணர்வில் செயலாற்றுங்கள். உள் பேச்சுக்களையும் மன அமைப்புக்களையும் சுத்தம் செய்வதில் முனையுங்கள்.

நாம் எப்பொழுதும் குழந்தைகளைப் பொம்மைகளாக்கி கட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம். குழந்தைகள் கட்டுக்கடங்காத சக்தி.

நாம் அதைக் கையாளும் சுலபத்திற்காகப் பெட்டிக்குள் அடைத்து விடப் பார்க்கிறோம்.

இரண்டு நாய்கள் தெருவில் நடந்துசென்று கொண்டிருந்தன. முதல் நாய் சொன்னது, என் பெயர் ஸாண்டி, உன் பெயர் என்ன?.... *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -30

## பல்கலையின் வளர்ச்சியில் உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு ஒரு மைல்கல்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக்கான களமாக தற்போது களைகட்டத் தொடங்கியிருக்கின்றது. இன்னும் ஆறே ஆறு நாட்களிருக்கின்றன. உயிர்ப்புடன் உணர்வுடன் ஆராய்ச்சி முடிவுகளை முன்மொழிய உலகளாவிய மாநாட்டினை எதிர்பார்த்திருக்கின்றது. பல்கலைக்கழகத்தின் இரண்டாவது உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் 18,19ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது. பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி முடிவுகளை முன்மொழியும் வரலாற்று நிகழ்வு 2010 இல் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் தலைமையில் வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டுடன் ஆரம்பமானது. ஆரம்பமே உலகளாவிய அளவுக்கு முனைப்பு கொண்டிருந்தாலும் அமைதியாக அளவாக வருடாந்த மாநாடு என்னும் பெயருடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதில் கொண்ட அனுபவம் 2012 இல் முதலாவது உலக ஆராய்ச்சி மாநாடாக உருவெடுத்தது. பலரினுடைய உழைப்பின் பெறுபேறாக இம்மாநாடு அமைந்திருந்தது. தற்போதைய விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சிறீசற்குணராசாவின் வழிகாடடல் இதற்கு களமமைத்ததென்றால் மிகையாகாது. இவ்வருடத்தின் மார்ச் மாதத்தில் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தினால் பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பியின் தலைமையில் உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணத்தின் தலைமையிலும் வழிகாட்டலிலும் தொடர்ச்சியாக இரண்டாவது உலகளாவிய ஆராய்ச்சி மாநாடு இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கின்றது. நூற்றியொரு ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம்மாநாட்டில் முன்னிலைப்படுத்தப்படவிருக்கின்றன. இவ்வருடத்தின் மார்கழி மாதத்தில் இவ்வாராய்ச்சி மாநாடு நடைபெறவிருக்கின்றமை சிறப்புக்குரியதாகும். வருடம் முழுக்க வரண்டிருந்த பிரதேசம் மழை நிறைவாக பொழிந்ததால் ஆங் காங்கே வெள்ளக் காட்சிகளை கொண்டு பழைய நிலைக்கு வந்திருக்கின்றதென்பதை உணர்ந்தாலும் குறிப்பிட்ட தாழ்வான பிரதேசங்களில் வெள்ள அனாத்தமாக மாறிவிட்டிருக்கின்றது. காலநிலை மாற்றத்தின் நிஜத்தை காலநிலை தானாக மாறி காட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல இதுபற்றிய ஆராய்ச்சிகளையும் முடுக்கிவிட வேண்டும் என்பதனையும் கட்டியங் கூறியிருக்கின்றது.

தொழிற்றுறை அபிவிருத்தி பற்றி விடயங்களில் கரிசனை செலுத்த வேணடிய காலகட்டத்திற்குள்நுழைநதிருக்கின்றோம். இருப்பினும் வடபகுதியின் வன்னிப்பிராந்திய மாவட்டங்களில் வாழ்வாதாரத்தின் வருத்திக்குள் இன்னமும் கவனஞ் செலுத்த வேண்டியிருப்பதையும் நாம் கவனிக்க தவறக்கூடாது. இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய நிலையிலேயே மேற்கொண்டு அபிவிருத்திக்கான வழிகளை திட்டமிட்டு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்நிலையில் இவ்வாறான அபி விருத்தியின் கட்டுமானத்தில் புத்திஜீவிகளின் பங்களிப்பு மிக முக்கியமானதொன்றாக கருதப்படுகின்றது. வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு கல்வியியலாளர்கள் தமது அறிவையும் அனுபவத்தையும் ஆய்ந்தறியும் நுண்ணறிவையும் பயன்படுத்த வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த நிலையில் கடந்த வருட இறுதியில் தேர்தெடுக்கப்பட்ட வடமாகாணசபையின் நடவடிக்கைகளுக்கு கல்வியியலாளர்களின் பங்களிப்பை மாகாணசபையின் முதல்வர் இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வினவியிருந்தார். அதனை மையப்படுத்தி இவ்வருட உலகளாவிய மாநாடு அமையப்பெற்றிருக்கின்றது. வடமாகாண அபிவிருத்திக்கான ஆலோசனைகளையும் எதிர்பார்ப்புக்களையும் இங்குள்ள பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் ஆய்வுக்கட்டுரைகள் மூலமாக முன்மொழிய வேண்டும் என்னும் எதர்பார்ப்பு இருக்கின்றதனை உணரலாம். இம்மாநாட்டில் அலசி ஆராயப்படும் விடயங்களுக்கு மேலாக மேற்கொண்டு திட்டமிடப்பட வேண்டிய விடயங்களையும் ஆராய்ச்சிக்கான விடயங்களையும் இம்மாநாடு வெளிகொணரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநாட்டின் சிறப்பம்சமாக முதன முதலாக இலத்திரனியல் மாநாடு ஒன்றும் இவ்வருடத்தின் ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டது. முனைப்புடனான வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி என்னும் கருப் பொருளைக் கொண்டு நடைபெற்ற இம்மாநாட்டில் பலவிடயங்கள் கருத்துக்களாக பதியப்பட்டு மாநாட்டின் இணையத்தில் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆர்வமுடையவர்கள் (www.jfn.ac.lk/juice 2014) என்னும் இணையத்தளத்திற்கு வருகைதந்து அலசியாரயப்பட்ட செய்திகளை வாசிக்க முடியும். இம்மாதம் நடைபெறவிருக்கும் உலகளாவிய ஆராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தரமுடியாதவர்களுக்கும் தமது கருத் துக்களையும் அனுபவத்தையும் வெளி தேசத்திலிருந்து பரிமாற விரும்பிய எம்மினிய உறவுகளுக்கு வாய்ப்பளிக்க கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமாக இவ்விலத்திரனியல் மாநாடு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக 151 செய்திகளை உள்ளடக்கிய இம்மாநாட்டில் வடமாகாண அபிவிருத்தி சம்பந்தமான பல கருத்துக்கள் மற்றும் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.

மாகாண அபிவிருத்திக்கு இவை நிச்சயமாக பயன்படுவதோடு இதுசார்ந்து இன்னும் இலத்திரனியல் மாநாடுகளை நடத்தி மக்களின், புலமையாளர்களின், அனுபவசாலிகளின் கருததுக்களை உள்வாங்கி வடமாகாண அபிவிருத்தியை முன்னகர்த்த முடியும்.

வாய்ப்புக்களை வழங்கும் களமாக இம்மாநாடுகள் இருப்பதனை கல்விசார் சமூகம் பயன்படுத்தி தமது அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்வதோடு இதனது வெற்றிக்கு அனைவரும் முழுமையான பங்களிப்பையும் வழங்க வேண்டும். குறிப்பாக மாணவர்கள் தங்களது அறிவுத்தேடலுக்கான களமாக இதனை பார்க்கலாம். பல்வேறுபட்ட விடயங்கள் அலசியாராயப்பட இருப்பதனால் தமது அறிவை மற்றும் ஆய்வுக்கான திறனை வளர்த்துக் கொள்ளும் வியங்களும் இம்மாநாட்டில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன்.

இம்முறை ஆராய்ச்சி மாநாடு "முனைப்பான பிராந்திய அபிவிருத்தி" என்னும் கருக்கொண்டு அமைந்திருக்கின்றமை சிறப்பம்சமாகும். போர் நடைபெற்று ஐந்து ஆண்டுகள் கழிந்த நிலையில் மககளின் வாழ்வாதாரத்தை மையப்படுத்திய பணிகளில் இருந்த காலங்கள் கழிந்து அதனுடன் சேர்த்து

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVIII**

# எதிரணியின் கறுப்பு புத்தகம்

(கொழும்பு)

**தேர்தல் சட்டங்களை மீறி செயற்படுவோரின் குற்றங்களை வெளிப்படுத்த கறுப்பு புத்தகமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ள பொது எதிரணி நிரூபிக்கப்படும் இக்குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நபர்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கையினை வாராந்தம் வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கவும் திட்டமிட்டுள்ளது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் சட்டங்கள் மீறப்படுமென பொது எதிரணி தொடர்ச்சியாக குற்றச்சாட்டினை முன்வைத்து வருகின்ற நிலையில் அதனை பதிவு செய்து மக்களிடம் உண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் கறுப்பு புத்தகம் ஒன்றினை எதிரணியினர் தயாரபடுத்தியுள்ளனர்.

கறுப்பு புத்தகம் 2015 எனும் பெயரில் அறிமுகப்படுத்தியுள்ள இப்புத்தகத்தில் தேர்தல் சட்டங்களை மீறுவோர், தேர்தல் சட்ட திட்டங்களை மீறி தமது சர்வாதிகாரத்தினை கையாளும் நபர்கள் குறித்தும் அவர்கள் இழைத்த குற்றங்கள் தொடர்பிலும் அவர்களின் பெயர் விபரங்கள் மற்றும ஆதாரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.


இத்தகையவர்கள் தொடர்பில் முழு நாட்டிற்கும் வெளிப்படுத்தவும் இந்த குற்றவாளிகளின் விபரங்களை சர்வதேச அளவில் வெளிப்படுத்தும் வகையிலும் தேர்தல் சட்டங்களை மீறிய நபர்களின் பெயர் விபரங்கள் மற்றும் குற்றங்கள் அடங்கிய அறிக்கையினை வாராந்தம் இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொது எதிரணி தெரிவித்துள்ளது.

பொது எதிரணி நேற்று முன் தினம் எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது கறுப்பு புத்தக அறிக்கை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் வரையில் இடம்பெறும் குற்றச் செயல்கள் அரச தரப்பு செய்யும் மோசடிகள் அனைத்தும் வெளி வரும் எனவும் பொது எதிரணியினர் தெரிவித்தனர். (இ-5)

# சீனன்குடாவில் மகிந்த அரசாங்கம் கள்ள வாக்குகளை அச்சிடுகின்றது

## முன்னாள் அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக அரசாங்கம் கள்ள வாக்குகளை பெருமளவில் பயன்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் கள்ள வாக்குச் சீட்டுக்களை சீனன்குடாவில் உள்ள கடற்படை முகாமில் உள்ள லேத் இயந்திரம் மூலம் அச்சிட்டு அவை அங்கிருந்து வெலிசறை முகாமுக்கு கொண்டு வரப்பட்டுள்ள இந்த தகவலை கடற்படையினர் தமக்கு தெரிவித்துள்ளதாக ராஜித சேனாரத்ன கொழும்பில் வைத்து தெரிவித்தார்.

இந்தநிலையில், தாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு இது தொடர்பான முறைப்பாட்டை செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை 17ஆவது அரசியல் அமைப்பு இல்லாமல், பெயருக்கு மாத்திர்மே தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ள நிலையில் தேர்தலின் போது நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-5)

# வாக்கு வங்கிக்கட்சி எம்முடன்; தோல்வியடைந்தவையே வெளியேறின

மலையகத்தின் வாக்குவங்கியைக் கொண்டுள்ள மிகப்பெரிய கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எம்முடனே உள்ளது. அது எமக்கு மிகப் பெரிய பலமாகும். ஊவா மாகாண சபையில் போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணியினதும் தொழிலாளர் தேசிய சங்கத்தினதும் வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர் என்பதே உண்மையாகும்." இவ்வாறு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரி வித்தார். மலையக மக்களை அரசு புறக்கணித்தது எனக் குற்றஞ்சாட்டி எதிரணியில் இணைந்துள்ள முன்னாள் பிரதியமைச்சர்களான ராதாகிருஷ்ணன், திகாம்பரம் ஆகியோர் ஆதாரங்கள் இருந்தால் அதை நிரூபித்துக்காட்டட்டும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும சவால் விடுத்தார். கொழும்பிலுள்ள ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போதே மேற்படி விடயங்களை அவர் தெரிவித்தார். "அரசின் முக்கிய அமைச்சுக்களில் பிரதி அமைச்சர்களாக இருந்த ராதாகிருஷ்ணன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து அரசிலிருந்து பிரிந்து சென்ற பின்னர் அரசுக்கு எதிராக பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாது, அவர்களுக்கு 3 இலட்சத்துக்கு அதிகமான வாககுகள் மலையகத்தில் இருப்பதாகவும கூறியுள்ளனர். இவர்களின் இநதக கருத்துக்களானது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகொண்ட கொடிய யுத்தத்தினை ஒருகுடும்பம் உரிமை கொண்டாடுகிறது

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



**இராணுவத்தின் இரத்தத்தில் வெற்றி கொள்ளப்பட்ட யுத்தத்தினை ஒரு குடும்பம் மாத்திரம் உரிமை கொண்டாடுகின்றது. ஒரு குடும்பத்தின் அராஜக ஆட்சிக்கு எதிராக முழுக்குடும்பங்களும் ஒன்று திரண்டு மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து வருகின்றன என பொது எதிரணியின் உத்தியோகபூர்வமான முதலாவது செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் காரியாலயத்தில் இடம் பெற்றது. இதன்போதே பொது எதிரணியின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நல்லாட்சிக்கான ஆண்டாக 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மைத்திரிபால சிறிசேனவின் தூய்மையான ஆட்சி ஆரம்பமாகவுள்ளது. நாட்டில் அனைத்துக் குடும்பங்களும் எதிர்பார்க்கும் மைத்திரிபாலவின் ஆட்சியும் ஒரு குடும்பம் மட்டுமே எதிர்பார்க்கும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியும் மோதிக் கொண்டிருக்கின்றது. ஆயினும் இறுதியில் இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சி அமையும். இன்று பொது எதிரணியின் பக்கம் பாராளுமன்ற மாகாண மாவட்ட சபை உறுப்பினர்கள்அனைவரும்ஒன்றிணைந்து வருகின்றனர். இதுவே எமக்கு கிடைத்த மிகப்பெரிய உற்சாகமாகும்.

மேலும் யுத்தத்தை வைத்து அரசாங்கம் வியாபாரம் செய்து வருகின்றது. இராணுவத்தினர் இரத்தம் சிந்தி பெற்ற வெற்றியினை ஒரு குடும்பம் மாத்திரம் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்த யுத்தத்தில் மகிந்த ராஜபக்ஷவிற்கு சிறிய அளவு உரித்துள்ளது. அதை நாம் மறக்கவில்லை. ஆனால் அதையும் தாண்டி இராணுவ வீரர்களுக்கும் படைத் தளபதிகளுக்கும் அதிக பங்கு உள்ளது. அதை மறந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது புகழை பரப்பிக் கொண்டிருக்கின்றார். இதற்கும் குடும்ப அரசியலின் சர்வாதிகார ஆட்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்க நாம் பொது எதிரணியாக களமிறங்கியுள்ளோம்.

அழகான பெண் ஒருத்தி ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டுள்ள போது அவளை இளைஞன் ஒருவன் காப்பாற்றிய பின்னர் காப்பாற்றியதற்காக அவளை வன்புணரவோ துஷ்பிரயோகிக்கவோ முடியாது. அவ்வாறானதொரு குற்றத்தினையே இன்று மகிந்த ராஜபக்ஷ செய்து வருகின்றார். யுத்த சூழலில் இருந்து அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை காப்பாற்றி விட்ட பின்னர் அந்த நாட்டின் தூய்மையான தன்மையினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப அரசியல் சீரழிக்கின்றது என அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (இ-5)

# ஸ்ரீ பாத யாத்திரிகர்களின் நலன் கருதி சுகாதார பரிசோதகர் அலுவலகங்கள்


சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரிகர்களின் நலன் கருதி, நல்ல தண்ணி மற்றும் காருலுத் தென்ன பகுதிகளில் தற்காலிக சுகாதார பரிசோதகர் காரியாலயங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பிராந்திய சுகாதார அதிகாரி ஜெய்கணேஷ் தெரிவித்தார். எதிர்வரும் 6 மாத காலத்தில், நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சிவனொளிபாதமலைககு வரும் யாத்திரிகளின் நலன் கருதி, சிவனொளிபாதமலை மற்றும் நல்ல தண்ணி பிரதேசங்களில் தற்காலிக வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பொருட்களின்சுகாதார தன்மையை உறுதிப்படுத்தும்வகையில் 24 மணி நேரமும் மேற்படி இரு அலுவலகங்களும் தங்களது சேவையை முன்னெடுக்கும் என அவர் கூறினார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 450 |
| தக்காளி | 140 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 40 | 50 |
| கோவா | 140 | 120 | 140 |
| கரட் | 160 | 200 | 240 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 140 | 100 |
| வாழைக்காய் | 60-70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-110 | 120 | 80-160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 400 | 240 |
| வெண்டிக்காய் | 100-140 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 270 | 280 | 200 |
| லீக்ஸ் | 230 | 260 | 280 |
| பீற்றூட் | — | 150 | 200 |
| கறிமிளகாய் | 200 | 350 | 240 |
| முருங்கைக்காய் | — | 450 | 400 |
| போஞ்சி | 220 | 220 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 10-25 | 50 | 40 |
| தேசிக்காய் | 50-80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 150 | 160 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 221

டொறின் மன்மதநாயகம்





இரத்தினசபாபதி பாலராஜா




ராஜமணி சுப்ரமணி





சிவா சக்தி




சதீஸ் சியானி




கனகரத்தினம் கீர்த்தனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் நிலம் மற்றும் சொத்துக்கள் அபகரிப்பு! குற்றவாளிகள் யார்?

சிறிலங்காப் படைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களைவிட சட்டரீதியற்றவரகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் ம்ற்றும் வீடுகளின் அளவு மிகவும் அதிகமாகக் காணபபடுவதாக வீட்டு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

*இவ்வாறு கொழும்பை தளமாகக் கொண்ட The Sunday Leader ஊடகத்தில் Caelia Nathaniel எழுதியுள்ள செய்தி ஆய்வின் தமிழாக்கம்.*

சிறிலங்காவில் போர் முடிவடைந்ததிலிருந்து வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினையானது பல ஆண்டுகளாகப் பேசப்படும் பிரதான விடயமாகக் காணப்படுகிறது. சிறிலங்காப்படைகளே வடக்கில்பெருமளவான நிலப் பரப்பைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் அதேவேளையில், இது தொடர்பாக நிலவும் பிறிதொரு பிரச்சினை இதுவரையில் பேசப்படவில்லை.

அதாவது சிறிலங்காவில் போர தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறிய தமிழ் மக்களின் நிலங்கள் வேறு தரப்பினரால் கையகப்படுத்தப்படடுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த நிலையில் அதனைத் தமது பொறுப்புக்களில் வைத்திருந்த மூன்றாம் தரப்பினர் இந்த வீடுகளையும் காணிகளையும் தற்போது உரிமையாளர்களிடம் மீளவும் வழங்க மறுக்கின்றனர்.

போர் முடிவடைந்ததன் பின்னர் தற்போது சிறிலங்காவுக்குத் திரும்பி வரும் புலம்பெயர் தமிழர்கள் தமது சொந்த நிலங்கள் மற்றும் வீடுகளைப் பார்க்கச் செல்லும் போது அதனை வேறொரு தரப்பினர் கையகப்படுத்தியுள்ளமை வேதனையை உண்டு பணணுகின்றது. இதுதொடர்பாகப் பல்வேறு வழக்குகள் நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும் பல ஆண்டுகளாக இவை தீர்க்கப்படாது நிலுவையிலேயே காணப்படுகின்றன.

சிறிலங்காப் படைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை விட சட்ட ரீதியற்றவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் மற்றும் வீடுகளின் அளவு மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக வீட்டு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஆனால தனியார்களினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விட இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் அளவே அதிகமாகக் காணப்படுவதாக வேறுசிலர் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் தனியார்களுக்குச் சொந்தமான 6700 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளையில், வன்னியில் 80 சதவீதமான நிலப்பரப்புக்கள் அரசுக்குச் சொந்தமானவையாகும். இவற்றை அரச அனுமதியுடன் தனியார்கள் கையகப்படுத்தியுள்ளனர். அதாவது அரசுக்குச் சொந்தமான 80 சதவீதமான நிலப்பரப்பையும் பாதுகாப்புப் படையினரோ அல்லது அரசாங்கமோ எடுக்கவில்லை. ஆனால் அரச அனுமதியுடன் இந்தக் காணிகளைப் பயன்படுத்தும் தனியார்கள் இவற்றைத் தமக்குச் சொந்தமாக்கிவிட முடியாது. ஆகவே போரின போது நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தற்போது தமது காணிகளுக்கு உரிமை கொண்டாடும் போது அது ஏற்கனவே வேறு ஒருவரால் உரிமை கொண்டாடுவதாகக் கூறப்படுகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக 'சண்டேலீடர்' பத்திரிகை வீ.ஆனந்தசங்கரி, எஸ்.தவராசா, கலாநிதி முத்துக் கிருஸ்ணா சரவணந் தன், பொன்னம்பலம் மற்றும் நேரு ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளது.

எஸ்.நேரு: பிரித்தானியாவுக்கு புலம்பெயர்ந்து சென்ற, காவற்துறை அதிகாரி தற்போது யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்துள்ளார்: "நான் நீண்ட காலமாக பிரித்தானியாவில் வாழ்ந்த பின்னர் எனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் சென்றேன். ஆனால் தனியார் ஒருவரால் எனது நிலம் அபகரிக்கப்பட்டிருந்தது. எனது நிலத்தில் குடியிருந்ததற்கான எவ்வித வாடகையும் அவர் எனனிடம் தரவில்லை. நான் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தேன். 2 ஆண்டுகளாகியும் இது தொடர்பாக எவ்வித தீர்ப்பும் வழங்கப்படவில்லை. இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றில் விவாதிக்கப்படுகின்றபோது, எனது எதிராளியின் சார்பாக வாதிடும் சட்டவாளர் இதனை ஒத்தி வைக்குமாறு கோருகிறார். யாழ்.நீதிமன்றில் இவ்வாறான நில அபகரிப்பு வழக்குகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன"

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொது மக்களின் நிலங்களைப் பாதுகாப்புப் படையினர் கையகப்படுத்தியுள்ளனர் எனக் கூறுகின்றனர். ஆனால் உள்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரை விட பொது மக்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்துள்ளனர். சிறியதொரு நிலப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வாழும் தமிழ் மகன ஒருவர் அது தனது காணி என வாதிடுகிறார். எனது நிலத்தில் குடியிருப்பவர் எனக்கு வாடகையாக ஒரு சதமேனும் தரவில்லை. ஆனால இவர் தற்போது எனது நிலத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்"

"இவ்வாறான வழக்குகளைத் தீர்மானிப்பதற்கான எவ்வித வழிகாட்டல்களையும் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை. இந்த வழக்குகளை ஆறு மாதங்களுக்கு மேல் இழுத்தடிக்கக் கூடாது என நீதிபதிகளிடம் கூறவேண்டும். வழக்குகளை விவாதிப்பதற்குத் தேவையான நீதிமன்றங்கள் இல்லாவிட்டால் சிறிலங்கா அரசாங்கம் மேலதிக நீதிமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிலத்திற்குச் சொந்தமான உறுதி மற்றும் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒரு சில நிமிடங்களில் முடிவெடுக்கக் கூடிய மிகச் சாதாரணமான விவகாரமாக இது காணப்படுகின்ற போதிலும் இந்த வழக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கு 5-6 ஆண்டுகள் எடுக்கின்றன"

"நில உறுதியை அல்லது பத்திரத்தைக் கொண்டிருக்காத எவருக்கும் சிறிலங்கா மின்சார சபை மின்வழங்கலை வழங்கக்கூடாது. வாடகைக்கு குடியிருப்பவராயின் வாடகையை உறுதிப்படுத்தும் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ வேறெந்த அரசியற் கட்சிகளோ இந்த விவகாரம் தொடர்பான கருத்துக்களை முன் வைப்பதில்லை"

'காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் 6700 ஏக்கர் நிலப்பரப்புக்கள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவை பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே எடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் சட்டம் மற்றும் ஒழுங்குகளைக் காப்பாற்றுவதற்கான பணிகளை ஆற்றுகின்றனர். இவர்களை வீடுகளை மற்றும் நிலங்களை சட்ட ரீதியற்ற வகையில் அபகரித்து புலம்பெயர் தமிழ் நில உரிமையாளர்களை ஏமாற்றும் தமிழ் மக்களுடன் ஒப்பீடு செய்ய முடியாது"

கஜேந்திரன் பொன்னம்பலம்: (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டவாளரும் தலைவரும்)

வன்னியில் நிலங்களை அபகரிக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகமாகும். ஆனால்யாழ்ப்பாணத்துடன்ஒப்பிடும்போது இது குறைவாகும். போரின் போது நாட்டை விட்டு வெளியேறி தற்போது தமது வீடுகள் மற்றும் நிலங்களைப் பார்வையிடுவதற்காகத் திரும்பி வருவோர் ஏமாற்றப்படும் நிலை மாற்றப்பட வேண்டும். இதனால் இவர்களின் நலனுக்கேற்ப சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் இது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தற்போதைய சட்டத்தின்படி, வாடகை வீட்டிலுள்ள ஒருவர் அந்த நிலத்தின் உண்மையான சொந்தக்காரரின் பெயரில் 10 ஆண்டுகள் வரை வசிக்க முடியும். இவர் மின்சார சபை, நீர் சபை மற்றும் அரசாங்கத் திணைக்களங்களில் உரிமையாளரின் பெயரில் மாறறம் செய்ய முற்படக் கூடாது. இவ்வாறான நிலையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் உரிமையை மாற்றம் செய்யாது அந்த நிலத்தில் வாழமுடியும்.

குறித்த நிலத்திற்கு வாடகை வழங்காது பத்து ஆண்டுகளுக்கு மேல் வாழும் ஒருவர் உரிமையாளர் இல்லாதவிடத்து மின்சார சபையில் தனது பெயரைப் பதிவு செய்து நில உரிமையைத் தனதாக்க முடியும். தனது சொந்த நிலத்தில் வாழும் தனியாருக்குப் பணத்தைச் செலுத்தி தமது சொத்துக்களைச் சிலர் மீண்டும் தமது உடைமையாக்குகின்றனர். பலர் இது தொடர்பாக நீதிமன்றுக்குச் செல்வதில்லை என நான் நினைக்கிறேன். ஆனால் வன்னியில் இது மிகப் பெரிய பிரச்சினையாகும்.

வீ.ஆனந்தசங்கரி (தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரும் கிளிநொச்சி வாசியும்)

வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 80-90 சதவீத நிலங்கள் அரசிற்குச் சொந்தமானதாகும். இதில் தனியார்கள் அரசின் அனுமதியுடன் வாழ்கின்றனர். அரசாங்கத்தின் அனுமதியின்றி இவ்வாறான நிலங்களை நில அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் ஒருவர் கைமாற்றம் செய்ய முடியாது. போரின் இறுதியில் இவ்வாறான நில அனுமதிப்பத்திரங்கள் வைத்திருந்தவர்களின் நிலங்கள் மீண்டும் அவர்களிடம் வழங்கப்படடன. ஆனால் இதற்கென காலவரையறை உள்ளது.

அரச நிலத்தை வைத்திருக்கும் ஒருவர் பத்து ஆண்டுகளுக்குள் இதனைத் தமதாக்கிக் கொள்வதற்கான விண்ண ப்பத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனால், பதினொரு ஆண்டுகளின் பின்னர் இதற்கான உரிமையை நாம் கோரமுடியாது. இது சட்ட ரீதியற்றது.

கிளிநொச்சியில் 20 ஏக்கர் தென்னங் காணியை நான் வைத்திருந்தேன். இதனை ஒருவர் கையப்படுத்தியிருந்தார். பின்னர் தற்போது இதில் பத்து ஏக்கர்களை நான் மீளவும் எனது உடமையாக்கிக் கொண்டேன். ஆனால் மீதியை இதனைக் கையகப்படுத்தி வைத்திருந்தவரிடம் கொடுத்துவிட்டேன்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் இந்தச் சூழல் வேறுபட்டது. யாழ்ப்பாணத்தில் 80 சதவீத நிலப் பரப்பு தனியாருக்குச் சொந்தமானது. ஏனையவர்களிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு மக்கள் நாட்டை விட்டுப் புலமபெயர்ந்திருந்தனர். இவர்கள் தமது நிலங்களைப் பொறுப்பாக ஒப்படைத்தவர்களுடன் சமரசம் பேசி அல்லது ஏதாவது உடன் பாட்டை எட்டுவதன் மூலம் தமது நிலங் களை மீளவும் பெற்றுக்கொள்ள முடியும்.



கலாநிதி முத்துக்கிருஸ்ணா சரவணந் தன் (பருத்தித்துறை அபிவிருத்தி நிலையத்தின் பிரதான ஆய்வாளர்)

ஒருவர் ஒழுங்காக வாடகை கொடுக்கும் போது மட்டுமே குறித்த சொத்தைத் தனது உடமையாக்க முடியும் என சட்டம் கூறுகிறது. ஆனால் பல வழக்குகளில் வாடகை வழங்கப்படவில்லை. வேறுவிதமாகக் கூறினால் நிலத்தை அபகரித்து வைத்திருப்பவருக்கு எதிராக சட்டம் மூலம் அணுகும் போது அவர் அதனை உரிமையாளரிடம் கையளிக்க வேண்டும்.

நில உரிமையாளரும் நிலத்தை அபகரித்து வைத்திருப்பவரும் சமரசப் பேச்சுக்களின் மூலம் இந்தப் பிரச்சினையை அணுகமுடியும். ஒரு நிலத்தில் குடியிருப்பவரை அங்கிருந்து அகற்றுவதற்கு நில உரிமையாளர் பணம் கொடுப்பது வழமையான செயலாகும். சில இடங்களில், நிலத்தில் தங்கியிருப்போர் வேறு இடத்திற்குச் செல்வதற்கான கால அவகாசம் வழங்கப்படுகிறது. பருத்தித்துறையில் மயிலிட்டி மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வெவ்வேறு நிலங்களில் குடியேற்றப்பட்டனர். இந்த நிலங்களின் சொந்தக்காரர் வந்தபோது இவர்கள் நிலங்களை விட்டு வெளியேறினர்.

எஸ்.தவராசா (ஈ.பி.டி.பி வடக்கு மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சியின் தலைவரும்)

தனியாரால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மற்றும் வீடுகளை மீளப்பெற்றுக் கொள்வதில் இதுவரை எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. நில உரிமையாளர்கள் தம்மிடமுள்ள அல்லது அரச அதிபர் பணிமனையிலுள்ள நில ஆவணங்களைக் காண்பித்துத் தமது நிலங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளமுடியும். வடக்கில் 10 ஆண்டுகளாக வேறொருவரின் நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பவர் அந்த நிலத்தைத் தனதாக்க முடியாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் சட்டத்தில் திருத்தம் ஒன்றை முன்வைத்தார். இது போரின்போது நாட்டை விட்டுப் புலம்பெய ர்ந்தவர்களுக்கு உதவுவதற்காகவே முன் வைக்கப்பட்டது.

ஆனால் இது சட்டத்தில் இணைக்கப்படுமா என்பது சந்தேகமே. சில தொழில்நுட்பப் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இதனை எதிர்த்து த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருநதமையை என்னால் நினைவுபடுத்த முடிகிறது.

*-நித்யபாரதி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழம் மலரும்

## கம்மன்பில அரசிற்கு எச்சரிக்கை

**பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பீடமேறினால் தமிழீழம் மலரும் சாத்தியக்கூறுகளே உள்ளன. அதனால் அரசைப் பாதுகாக்கவே மீண்டும் அதில் இணைகிறேன் எனத் தான் கட்சி தாவியமைக்கு காரணம் கற்பித்தார் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான உதயகம்மன்பில.**

எமது கொள்கைகளை மறந்து பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஹெல உறுமய கைகோர்த்துள்ளது. நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் ஹெல உறுமயவுக்கு உடன் பாடில்லை.

கட்சிக் கொள்கையை விட தாய் நாட்டின் ஸ்திரத்தன்மை முக்கியம் என்பதற்காக ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் அரசிலிருந்து எதிர்க்கட்சியில் இணைந்த உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் மீண்டும் எதிரணியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவினார்.

நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்தஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த முடிவு மிகவும் கவலையுடன் எடுக்கப்பட்ட ஒன்றாகும். கட்சி ஆரம்பிக்கப்பட்டு 15 வருட காலமாக விசுவாசமாக இருந்த எனக்கு மைத்திரிபால வெற்றி பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இந்த முடிவை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

நான் கட்சியை மிகவும் நேசிக்கின்றேன். ஆனால் அதைவிடவும் தாய் நாட்டை நேசிக்கின்றேன். ஹெல உறுமயவுக்கு எனக் கொள்கைகள் உள்ளன. நாங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் சில திருத்தங்களையே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம். ஆனால, பொது எதிரணி வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொணட ஒப்பந்தத்தில் 100 நாட்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக கைச்சாத்திட்டார்.

இதேவேளை, அங்கு 3 மணித்தியாலங்களின் பின்னர் ஹெல உறுமயவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ஜனாதிபதி முறையில் திருத்தங்களை செய்வதாக கைச்சாத்திட்டார். இவர் யாரை ஏமாற்றப் போகிறார்? ஐ.தே.கவையா? அல்லது ஹெல உறுமயவையா? பரஸ்பர வேறுபாடு ஆரம்பத்திலேயே நிலவுகின்றது.

தேர்தல் முடிந்து இவர்கள் எவ்வாறு ஸ்திரமான அரசை நிறுவப் போகிறார்கள். இவர்களால் 100 நாட்களில் ஒன்றும் செய்ய முடியாது. எல்லாம் போலி நாடகமே. தற்போதைய நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை பாதுகாக்க வேண்டும். இல்லையென்றால் நாடு துண்டு துண்டாக சிதறிவிடும். நாங்கள் முதலில் அரசிலிருந்து வெளியேறி, பௌத்த அமைப்புகள் ஒன்றிணைந்து 3 ஆவது ஜனாதிபதி வேட்பாளரை தேர்தலில் நிறுத்தவே தீர்மானித்தோம்.

ஆனால், அது சாத்தியப்படவில்லை. எனினும், எனக்கு பொது எதிரணி வேட்பாளரை ஆதரிப்பதில் எந்தவித உடன்பாடும் இருக்கவில்லை என மைத்திரிபால சிறிசேன ஆட்சிப் பீடம் ஏறினால் நாட்டில் மக்கள் ஆட்சி இல்லாமல் போய் தமிழீழம் உருவாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மாதாந்த கொடுப்பனவு 4ஆயிரமாக அதிகரிக்கும்



நாடு முழுவதிலுமுள்ள 18 தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 4000 ரூபாவாக அதிகரிக்கப்படும். தேசிய கல்வி விஞ்ஞான பீட வரலாற்றி லேயே ஒரு மறுமலர்ச்சியை ஏற்ப டுத்தும் வகையில் ஜனவரி மர்தம் முதல் இந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

திவிநெகும வாழ்வாதார திட்டத்தின்கீழ் தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களுக்கு மாதிரி விவசாய பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக டிரக்டர்களை கையளிக்கும் வைபவம் கம்பஹா தேசிய விஞ்ஞான கல்வி பீடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் பிரதம விருந்தி னராக கலந்துகொண்டு உரை நிகழ்த தும்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்படி தகவலை தெரிவித்தார்.

அமைச்சின் மேலதிக செயலாளர் சாந்த பண்டார , தேசிய கல்வி விஞ்ஞான பீடங்களின் ஆணையாளர் எல்எச்.டி தர்மசேன உட்பட பிரமுகர்கள பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பௌத்த பிக்குகளினது ஆதரவைத் திரட்ட வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள்

### தேசிய சங்க சம்மேளனம் குற்றச்சாட்டு

பௌத்த பிக்குகளின் ஆதரவினை திரட்டும் நோக்கில் அரசாங்கம் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளதாக தேசிய சங்க சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாயின்கல ஆனந்த சாகர தேரர், சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலின் போது இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

மிதவாத கொள்கைகளை பின்பற்றி வரும் 70 பௌத்த பிக்குகளுக்கு அரசாங்கம் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

60 முதல் 80 இலட்ச ரூபா பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இந்த வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள் ளது.

பௌத்த பிக்குகளின் தேசிய ரீதியான கொள்கைகளை சிறைப்படுத் தும நோக்கில் இவ்வாறு வாகனங் கள் வழங்கப்பட்டுள்ளன என அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. (இ-5)

## போலிப் பிரசாரத்தை தடுக்க பொறிமுறைமை அவசியமாம்

### வாசுதேவ நாணயக்கார

இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் போலிப் பிரசார த்தை தடுக்க பொறிமுறைமை ஒன்று அவசியமாகின்றது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள் ளார்.

மகிந்த தேர்தலில் வெற்றியீட்டுவார் என அறிந்து கொண்ட எதிர்க் கட்சிகளுக்கு பித்து பிடித்துள்ளது.

இதன்காரணமாகவே சமூக வலைத்தளங்களில் அதிகளவில் அரசிற்கு எதிராக அவதூறு ஏற்படுத்தப்படுகிறது.

இணையத்தில் செய்யப்படும் போலி குற்றச்சாட்டுக்களுக்கு இணையத்தின் ஊடாகவே பதிலளிக்க ஓர் பொறிமுறைமை அவசியமாகின்றது.

பொறுப்புணர்ச்சியின்றி சில சமூக இணைய வலையமைப்புக்களில் தகவல் வெளியிடப்படுகின்றது.

இந்த நோக்கம் வெற்றியடைய இடமளிக்க முடியாது என வாசுதேவ நாணயக்கார கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### மூத்தோர் பெருமை

ஒரு ஊரிலே ராஜா ஒருவர் இருந்தார். அவருக்குப் பின் இளவரசன் பட்டத்துக்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது.

இளைஞர்களின் வளர்ச்சிக்கு பெரியவர்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அதனால் அவன் பட்டத்துக்கு வந்ததும் ஒரு உத்தரவை பிறப்பித்தான்.

"இந்தத் தேசத்திலே பெரியவர்கள் யாரும் இருக்கக்கூடாது. அவர்களை நாடு கடத்த வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களை வீட்டிலே வைத்திருந்தால், அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவ்வூரில் இருந்தவர்கள் தங்களது அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரையும் வேறு தேசத்துக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இவன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்.

இப்படி இருந்த காலத்திலே அந்நிய நாட்டிலே இருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான். என்னோடு போட்டியிடக்கூடிய புத்திசாலிகள் யாராவது இந்தத் தேசத்திலே இருக்கிறார்களா? என சவால் விட்டான்.

இப்படியாக இவன் சவால் விட்டது அந்த இளவரசன் காதுக்கு எட்டியது.

உடனே அவனை அழைத்து "என்ன உன்னுடைய சவால்... அதைச் சொல்" என்றார் இளவரசன்.

"இளவரசரே! வேறு ஒன்றுமில்லை. சாம்பலைக் கயிறாக திரிக்க வேண்டும். இது ஒரு போட்டி. அதன்பின் இன்னொரு போட்டி இதோ இந்த சங்கிலே நூலைக் கோர்த்துத் தர வேண்டும் என்றான்.

இரண்டுமே சாத்தியமில்லாத விடயம் என்பதை இளவரசன் உணர்ந்தார்.

இதுதான் இன்னொரு தேசத்திலே இருந்து வந்தவன் போட்ட சவால். இதைக் கேட்ட இளவரசனுக்கு அவமானமாகப் போய் விட்டது.

இவனுடைய சவாலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தத் தேசத்திலே இளைஞர்கள் யாருமே கிடையாதா? என்று கேட்டான். இதை ஊர் அறிய அறிவிக்குமாறு சொன்னான்.

ஒரேயொரு இளைஞன் மட்டும் முன்வந்தான். "என்னால் முடியும்" என்றான்.

இளவரசனுக்கு ஆச்சரியம்...

"எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்து கொண்டுவா பார்க்கலாம்" என்றான்.

இவன் சற்று இருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குப் போனான். சிறிது நேரத்தில் தட்டோடு ஓடி வந்தான். அந்தத் தட்டிலே... சாம்பலினால் திரிக்கப்பட்ட கயிறு! எல்லோருக்கும் ஆச்சரியம்.

சரி அடுத்தது சங்கிலே நூலைக் கோர்ப்பதா... சிறிது நேரம் பொறுங்கள் என்று கூறிவிட்டு சற்று நேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையிலே சங்கு. அதிலே ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருந்தது.

அந்நிய தேசத்தவனுக்கு வெட்கமாகப் போய் விட்டது. தோல்வியை ஒத்துக் கொண்டு திரும்பினான்.

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டி, பரிசு வழங்கினார்.

அதன்பின் மெதுவாகக் கேட்டார்; அது சரி... அது எப்படி சாம்பல் கயிறானது என்றார்.

ஒரு கயிறையெடுத்து தட்டத்தில் வைத்து கொளுத்தினேன். அது சாம்பலானது. அசையாமல் மெதுவாக எடுத்து வந்தேன்.

சங்கிலே நூலை நுழைத்தது எப்படி? என்றார்.

ஒரு எறும்பைப் பிடித்து அதன் உடம்பிலே ஒரு மெல்லிய நூலைக் கட்டினேன். அடுத்த பக்க நுழைவாயிலில் சர்க்கரையை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தடைந்தது என்றான்.

இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்? என்றார் அவர்.

இளவரசரே! மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாமல் என்னுடைய தாத்தா, அப்பா, அம்மா ஆகியோரை வீட்டிலே மறைத்து வைத்திருக்கிறேன். அவர்கள் கூறித் தந்த யோசனைதான் இதுவென்றான்.

இளவரசனுக்கு தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களையெல்லாம் உடனடியாக நாட்டினுள் திருப்பி அனுபவ அறிவுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தார்.

பெரியவர்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்; அவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் பெறுமதியானவை என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். முக்கியமாக சிறியவர் பெரியவர்களின் சொற்படி நடப்பது சாலச் சிறந்ததாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



**பதினோராமிடத்தில் சனி.... பணவரவுதான் இனி.... எதிர்காலத் திட்டங்களையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கும் மகர இராசி அன்பர்களே!**

**75/100**

முடியாத காரியத்தைக்கூட முடித்துக் கொடுக்கும் வல்லமை பெற்ற உங்களுக்கு, இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தான். சோதனைகளை வென்று சுகங்களைக் கைப்பற்றப் போகிறீர்கள். இதுவரை 10 இல் சனி சஞ்சரித்து வந்தபொழுது முத்தான வாழ்க்கையில் முட்டுக்கட்டை வந்து விட்டதே என்று நினைப்பீர்கள். கர்ம ஸ்தானத்தில் சனி வீற்றிருக்கும் பொழுது, பெற்றோர்களின் உடல்நிலையில் பாதிப்புகளைக் கொடுத்திருக்கலாம். பிரச்சினையில் சிக்கித் தவித்திருக்கலாம்.

இனி அந்த நிலை மாறி விவேகத்தோடு செயறபட்டு வெற்றி காணப் போகிறீர்கள். விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனி, ராகுவின் மூன்றாம் பார்வையில் இருக்கிறார். சில நாட்கள் கழித்து உச்சம்பெற்ற குரு, பெயரச்சியான சனியை பார்க்கப் போகின்றார். உங்கள் ராசியையும் பார்க்கப் போகின்றார். குரு பார்க்கக் கோடி நன்மை என்பதால் மளமளவென்று காரியங்கள் நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குரு புத்திர காரகன் என்று அழைக்கப்படுவதால், குழந்தைகளின் முன்னேற்றம் கூடுதலாகவே இருக்கும். ஏழாவது மாதம்வரைதான், இந்த மகிழ்ச்சி நிலையாக இருக்கும். அதன் பிறகு அஷ்டமத்து குரு அடி எடுத்து வைக்கப் போகின்றார். எனவே குருவின் பார்வை மாறிவிடுகிறது. மேலும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. இதுபோன்ற சூழ்நிலையில் ஆரோக்கியப் பாதிப்புகளும், அதிகச் செலவுகளும் தவிர்க்க முடியாததாக அமையும். உறவினர்களின் குறுக்கீடுகளால் குடும்பத்தில் பிரச்சினைகள் தலை தூக்கும். எனவே, மிக மிகப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

சனிப்பெயர்ச்சி சமயத்தில்கூட குரு அதிசாரமாக வந்து எட்டில் உலா வருகிறது. மாங்கல்ய ஸ்தானம், ஆயுள் ஸ்தானம் எனப்படும் இடத்தில் குரு, செவ்வாய், சனி, ராகு-கேது போன்ற கிரகங்கள் உலாவரும் பொழுது, பிறருக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். செய்யும் தொழிலில் எதிர்பார்த்த லாபத்தைக் காட்டிலும், பல மடங்கு குறைவாகவே கிடைக்கும். லாப ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் வருமானப் பற்றாக்குறை எதுவும் வைக்க மாட்டார். ஆனால் மனநிம்மதி மிக மிகக் குறைவாகவே கிடைக்கும்.

பிரச்சினைகள் அகல குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மேலும் உங்கள் சுயஜாதகத்தில் சனி இருக்கும் இடமறிந்து, அது நவாம்சத்தில் இருக்கும் இடம் பார்த்து, அதோடு இணைந்திருக்கும் கிரகம், பார்க்கும் கிரகம் ஆகியவற்றைக் கண்டறிந்து தேர்ந்தெடுக்கும் தெய்வ வழிபாடுகளை, தாரா பலம் பெற்ற நாளில் செய்தால் ஏராளமான நற்பலன்கள் கிடைக்கும்.

### பதினோராமிடத்தில் சனி! பணவரவுதான் இனி!

சனிபகவான், இதுவரை உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்தார். செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது செயறபாடுகளில் தீவிரம் காட்டி வந்திருப்பீர்கள். திடீர் இடமாற்றங்கள் திருப்பங்களைக் கொடுத்திருக்கும். கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக உங்களுக்கு மனகிலேசத்தை உருவாக்கியிருக்கலாம். அவற்றிற்கெல்லாம் வடிகாலாக இப்பொழுது பெயர்ச்சியாகும் சனி உங்களுக்கு விடிவு காலத்தை கொடுக்கப்போகிறது.

இருந்தாலும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், விரயங்கள் கூடுதலாகத் தான் இருக்கும். விரயத்திற்கேற்ற தனவரவு வந்துகொண்டேயிருக்கும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ள ஆயத்தம் செய்வீர்கள். இதுபோன்ற காலங்களில் திட்டமிட்டு வாழ்க்கை நடத்துவதுதான் கெட்டிக்காரத் தனமாகும். புதிய முயற்சிகளில் ஈடுபட நினைப்பவர்கள் சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உங்களுடைய சுயஜாதகத்தில் தெசாபுத்தி பலம்பெற்று இருக்குமேயானால் ஓரளவு நற்பலன்களை நீங்கள் காண இயலும். சனி சகல யோகத்தையும் வழங்க, உங்கள் ராசிநாதனுக்குரிய கிழமையில் தாராபலம் பெற்ற நட்சத்திரம் இணையும் நாளில் தகுந்த வழிபாடுகளைச் செய்தால் காரிய வெற்றி ஏற்படும், கவலை தீரும்.




### மந்தனின் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!

உங்கள் ராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் பதினோராமிடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். அதுமட்டுமல்லாமல் 5, 8 ஆகிய இடங்களையும் பார்க்கிறார். சனியின் பார்வை பதியும் இடங்களில் எல்லாம் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்துகொண்டேயிருக்கும். ஜூலை 2015 வரை உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது குருவும் உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எனவே, நங்கள் தப்பித்துக்கொணடீர்கள்.



தொழிலில் கூட்டாளிகளை அடிக்கடி கவனித்துக்கொள்வது நல்லது. வரவு செலவுகளை அப்போதைக்கப்போது கவனிக்காமல் இருந்தால் மகிழச்சியோடு மாற்றங்கள் வரும் என்று நினைத்திருந்த நேரத்தில் ஏமாற்றங்களே வந்து சேரும். உறவினர்கள் உதட்டில் ஒன்றும, உள்ளத்தில் ஒன்றும் வைத்துக்கொண்டு பேசுவார்கள். தொகை கையிலிருந்தால் செலவாகிவிடும். எனவே, அதை அசையாத சொதது்க்களாகவோ, ஆடை, ஆபரணங்களாகவோ மாற்றி வைத்துக்கொள்வது நல்லது.

சனியின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பிள்ளைகளின் கல்வி மற்றும் கடல் தாண்டும் முயற்சிகளுக்காக எதிர்பார்ப்போடு இருந்தவர்களுக்கு அது நல்லவிதமாக நடைபெறும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி பலன்கள்!

விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப் போகிறது. 5.7.2015 இல் சிம்ம ராசியிலும், 2.8.2016 இல் கன்னியிலும், 2.9.2017 இல் துலாம் ராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

குரு உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். சகாய ஸ்தானம், வெற்றிகள் ஸ்தானம் என்பதைக் குறிக்கும் இடம் மூன்றாமிடம். அதே நேரத்தில் பயணங்களையும், விரயங்களையும் எடுத்துரைக்கின்ற இடம் 12 ஆம் இடமாகும். அந்த 2 இடங்களுக்கும் ஆதிபத்யம் பெற்ற குருபகவான் இப்பொழுது சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். பன்னிரண்டாமடத்திற்கு அதிபதி 8 இல் சஞ்சரிக்கும் பொழுது, பல நல்ல பலன்களும் வந்து சேரும்.

கன்னி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் ராசியைப் பார்க்கப் போகின்றார். குரு சேர்ந்தாலும், பார்த்தாலும் கோடி நன்மை என்பது சான்றோர் வாக்கு. அப்படிப்பட்ட நன்மைகளை உங்களுக்கு அள்ளி வழங்க ஒப்பற்ற குருபகவான் கன்னி ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். விரய ஸ்தானாதிபதி குருவின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் பெண் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒரு பெரும் தொகையைச் செலவிடப் போகிறீர்கள். கல்யாண முயற்சிகள் கைகூடும்.

துலாம் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, மாற்றங்களும், ஏற்றங்களும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரப்போகின்றது. 10 இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும் என்பார். அந்த அடிப்படையில் திடீரென ஊர் மாற்றங்கள், வீடுமாற்றங்கள், தொழில் புரிபவர்களுக்கு தொழில் நிலையத்தை மாற்றி வேறிடத்திற்கு மாற்றும் சூழ்நிலை உருவாகும். தகுந்த பரிகாரங்களைச் செய்வதன் மூலம் திசைமாறிய தென்முகக் கடவுளை சிறப்பு வழிபாடாக அனுகூல நாளில் வழிபட்டு வருவதன் மூலமும் இந்த குருப்பெயர்ச்சிக் காலம் குதூகலம் தரும் காலமாக மாறும்.

### ராகு-கேது பெயர்ச்சிக்காலம்!

8.1.2016 இல் சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் ராசிக்கு 8 இல் ராகுவும், 2 இல் கேதுவும் உலா வருகிறார்கள். எனவே, ஏற்றமும், இறக்கமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக கேது 2 இல் சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. அடுத்தடுத்து மனக்கசப்பு தரும் சம்பவங்கள் ஏற்படலாம். அஷ்டமத்து ராகு அலைச்சலைக் கொடுக்கும். ஆதாயத்தைக் குறைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

நவக்கிரகத்திலுள்ள ராகு-கேதுக்களை வழிபட்டு வருவது நல்லது.

27.7.2017 இல் கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் காலம் சர்ப்ப தோஷத்தின் பின்னணியிலருக்கும் காலமாகும். எனவே, கனவிலும் நனவிலும் நாகங்கள் வந்துகொண்டேயிருக்கும். உடல் ஆரோக்கியம் சீராக, மாற்று மரு த்துவத்தை மேற்கொள்வதுதான் நல்லது. புதிய கடன் சுமைகள் உருவாகலாம். இக்காலத்தில் முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரத்தை, அனுகூல ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வரம் தரும் நாளில் வழிபாட்டை மேற்கொண்டால் நிரந்தர புகழும் கிடைக்கும். நிம்மதியும் கூடும்.

### சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற..

உங்கள் ராசிநாதன் சனி வக்ரம் பெறும் பொழுது, எதிலும் கூடுதல் கவனத்துடன் இருப்பதே நல்லது. குடும்பத்திலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, பிறர் கருத்தைப் புரிந்துகொண்டு செயறபட்டால்தான் பிரச்சினைகளிலருந்து விடுபட இயலும். கோபம், படபடப்பு போன்றவைகள் அடிக்கடி தலை தூக்கும். முன்கோபத்தின் காரணமாக முன்னேற்றப் பாதையில் தடைகள் உருவாகலாம். பொறுமையோடு செயறபடுவது மட்டுமல்ல, உரிமையோடு உங்கள் ராசிநாதன் சனியை வழிபாடும் செய்ய வேண்டும். குடும்ப பெரியவர்களை கலந்து ஆலோசித்து எதைச் செய்தாலும் நன்மையாகவே இருக்கும்.

### தொட்ட காரியங்களில் வெற்றிபெற வழிபாடு!

சனிக்கிழமை தோறும் அருகில் இருக்கும் சிவாலயத்திற்கு சென்று சனிபகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்வதோடு காகத்திற்கும் சோறு வைப்பது நல்லது.

## பதினோராமிடத்தில் சனி... பணவரவுதான் இனி....

*நாளை கும்பம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச யோகா தினம் ஜூன் 21ம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது ஐ.நா

## பிரதமர் மோடியின் கோரிக்கைக்கு 177 நாடுகள் ஆதரவு



(ஜெனீவா)

**இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபையில் விசேட உரையாற்றும் போது முன்வைத்த முக்கிய கோரிக்கையான ஜூன் மாதம் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்ற ஐக்கிய நாடுகள் சபை ஜூன் மாதம் 21 ஆம் திகதியை உலக யோகா தினமாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.**




இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பிரதமர் நரேந்திர மோடி, கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பேசியபோது, ஜூன் மாதம் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், ஜூன் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவிக்கக் கோரும் தீர்மானத்தை ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் ஐ.நா.வுக்கான இந்திய தூதுவர் அசோக் முகர்ஜி நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். அத்தீர்மானத்துக்கு 177 நாடுகள் ஆதரவு தெரிவித்து இருந்தன.

எந்த ஐ.நா. தீர்மானத்துக்கும் இவ்வளவு அதிக நாடுகள் ஆதரவு தெரிவித்தது இல்லை.

இதனால், அந்த தீர்மானம் அமோக ஆதரவுடன் நிறைவேறியது.

அதையடுத்து, ஜூன் மாதம் 21 ஆம் திகதி ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச யோகா தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று ஐ.நா. அறிவித்தது. (இ-5)

## காஸ்ட்ரோவுக்கு சீனாவின் கன்பூசியஸ் அமைதிப் பரிசு



சீனாவின் அமைதிக்கான கன்பூசியஸ் பரிசு, கியூபாவின் புரட்சியாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிடல் காஸ்ட்ரோவுக்கு வழங்கப்பட்டுள்ளது. உலக அமைதிக்கு பிடல் காஸ்ட்ரோ ஆற்றிய பங்களிப்பை பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. நோபல் பரிசைப் போன்று சீன அரசு சார்பில் கன்பூசியஸ் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. காஸ்ட் ரோ சார்பில் சீனாவில் பயிலும் கியூபா மாணவர் ஒருவர் கடந்த செவ்வாய்க் கிழமை அப்பரிசை பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, இந்த பரிசுக்கான தேர்வு பட்டியலில் பிடல் காஸ்ட்ரோ, தென் கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹை, ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் உள்ளிட்ட 20 பேர் இடம்பெற்றிருந்தனர். விருது தேர்வுக்குழு, பிடல் காஸ்ட் ரோவை தேர்ந்தெடுத்தது.

கியூபாவில் புரட்சி நடத்தி ஆட்சி மாற்றத்தை பிடல் காஸ்ட்ரோ கொண்டு வந்தார். அதே சமயம், தான் ஆட்சியில் இருந்த காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடனான பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்வு காண முயற்சித்தார் என்று தேர்வுக்குழு, அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புத்தரை வைத்து விளம்பரம் பர்மாவில் மூவர் கைதாகினர்

பர்மாவில் புத்தரை இழிவு படுத்தினர் எனும் குற்றச்சாட்டில் இருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னர் ரங்கூன் என்று அழைக்கப்பட்ட யாங்கோன் நகரில் இருக்கும் ஒரு மதுபான விடுதிக்கான விளம்பரத்தில் புத்தர் காதுகளில் 'ஹெட்ஃபோன்களை' அணிந்து கொண்டு இசை கேட்பது போல சித்தரித்திருந்தனர்.

இதையடுத்து இரண்டு பர்மியர்களும் நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவர் ஆகியோர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். அந்த விளம்பரம் அந்த மதுபான விடுதியின் ஃபேஸ்புக் பக்கத்தில் வெளியானவுடன் இணையதளங்களில் கோபாவேசக் கருத்துக்கள் குவிய ஆரம்பித்தன.

பர்மியச் சட்டங்களின்படி நாட்டில் எந்த மதத்தையும் இழிவுபடுத்துவது சட்டவிரோதமானது.

யாங்கோன் நகரிலுள்ள விஜி ஆஸ்ட்ரோ பார் எனும் அந்த மதுபான விடுதி வெளியிட்டுள்ள ஒரு விளம்பரத்தில், புத்தர் கண்களை மூடிக் கொண்டு, காதில் 'ஹெட்ஃபோன்களை' மாட்டிக் கொண்டிருப்பதும் அவரைச் சுற்றி கண்களைக் கூசவைக்கும் வண்ணங்கள் பூசப்பட்டுள்ளதும் காணப்படுகிறது.




**"அளவில்லா மது"**

அதே விளம்பரத்தில், புத்தரது படத்துக்கு கீழே ஞாயிற்றுக்கிழமை மதியங்களில், அளவில்லாமல் விரும்பியபடி மதுவும் ஹூக்கா குழாய்கள் மூலம் புகைக்கவும் வாருங்கள் என்று கூறி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் எழுந்த எதிர்ப்பை அடுத்து, நேற்று முன்தினம் பொலிஸார் அந்த மதுபான விடுதியை மூடி, அதன் பொது மேலாளர் பிலிப் ஃபிளாக்வுட் மற்றும் துன் துரேய்ன், டுட்கோ கோல்வின் ஆகிய இரு பர்மியர்களையும் கைது செய்துள்ளனர் .

[illegible] விவகாரங்கள் அமைச்சின் அதிகாரி ஒருவர் புகார் செய்ததையடுத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்த மூவர் மீதும் முறைப்படியான குற்றச்சாட்டு அடுத்த வாரம் பதிவு செய்யப் படும் என்று எதிர்பார்க்கபடுகிறது. அவர்களுக்கு இரண்டு வருட சிறை தண்டனை விதிக்கப்படும் வாய்ப்புகளும் உள்ளன.

**மன்னிப்பு**

எனினும் அந்த விளம்பரங்கள் இப்போது அகற்றப்பட்டு, அந்த இடத்தில் மன்னிப்பு கோரும் அறிவிப்பு வைக்கப்பட்டுள்ளது.

எந்தத் தனி நபரையோ மதக்குழுவினரையோ புண்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் அந்த விடுதியின் நிர்வாகம் கூறியுள்ளது.

பர்மாவில் அண்மைக் காலமாக பௌத்த தேசியவாதமும், சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆப்கானிஸ்தானில் இராணுவ பஸ் மீதான மனிதவெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் பலி



ஆப்கானிஸ்தனின் தலைநகர் காபூலின் கிழக்கு பகுதியில் உள்ள தரா ஹில் பகுதியில் நேற்று முன்தினம் காலை ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவதற்காக ஒரு பஸ்சில் சென்றனர். அப்போது தற்கொலைப் படை தீவிரவாதி திடீரென தாக்குதல் நடத்தினார். இந்த தாக்குதலில் பஸ்சில் பயணம் செய்த 6 வீரர்கள் கொல்லப் பட்டனர். 11 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பு ஏற்றுள்ளனர். இதில் 12 இராணுவ அதிகாரிகளை கொன்றுள்ளதாக அவர்கள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை தலிபான் தீவிரவாதிகளை குறி வைத்து நேட்டோ சர்வதேச படையினர் நேற்று முன்தினம் வான் வழி தாக்குதல் நடத்தியதில் 5 ஆப்கான் பள்ளிக் கூட மாணவர்கள் உயிரிழந்தனர் ஆனால் இதனை நேட்டோ படை உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SILVER SHIELD

பாடசாலை மாணவர்களுக்கு

# மாபெரும் விலைக்கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ்.நகர் மக்களின் தரச்சிறப்பு மிக்க காலுறைகள் (Socks)

## SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும் சகல அளவுகளிலும் பெற்றுக் கொள்ள




## ஸ்ரீ முருகன்

இல.303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

தொ.இல:021 222 5392

(சி-9350)



# கீழவன் காடு கலாமன்றம் – காரைநகர் இலவச கலை வகுப்புகளுக்கான அனுமதி

காரைநகர் (புது வீதி)

2015-2016

யாழ்ப்பாணம்
இல, 11, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (உதயன் பத்திரிகை நிறுவனம் அருகில்)

| மாணவர் அனுமதி | மாணவர் அனுமதி |
|---|---|
| (10-12-2014-31-12-2014) | (10-12-2014-31-12-2014) |
| காலை 9.00- பி.ப 4.00 | மாலை 5.00- 6.00 |

## நடைபெறுகின்ற கலை வகுப்புகள்

1) அறநெறி
2) பண்ணிசை
3) சங்கீதம்
4 நடனம்
5 மிருதங்கம்
6) வயலின்
7) சித்திரம்
8 நாடகமும் அரங்கியலும்
9) யோகாசனமும் தியானமும்
10) கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் செய்தல்

குறிப்பு :- யாழ்ப்பாணத்திலுள்ள காரைநகரைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் கலாமன்ற சேவையினைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும்வகையில் கடந்த விஜயதசமி தொடக்கம் கலை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

(சி-9348)

தொலைபேசி இல:- 021 221 1789

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்



## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்-கிளிநொச்சி

# மூன்று சில்லு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான மூன்றுசில்லு மோட்டார் சைக்கிள் (MOTOR TRICYCLE VAN) மூடிய கூறுவில்ல கோரல் மூலமாக விற்பனை செய்யவுள்ளோம். இதனைக் கொள்வனவு செய்யவிரும்புவோர் மூடிய கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வாகன இலக்கம் : NP QI-2732 (STREAM TRUCK 150CC)

## நிபந்தனைகள்

01.தமது மூடிய கூறுவிலைகளை பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கோரும் விலை என்பவை உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 22.12.2014ஆம் திகதி பி.ப 04.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்க வேண்டும்.

02.கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மூன்றுசில்லு மோட்டார் சைக்கிளுக்கான கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

03.கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.

04. கேள்விச் சபையினால் தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் மூன்றுசில்லு மோட்டார் சைக்கிளை மூன்று வேலை நாட்களுக்குள் முழுமையாக பணத்தினை செலுத்தி வெளியேற்றல் வேண்டும்.

05.மேற்படி வாகனத்தை பார்வையிட விரும்புவோர் வேலைநாட்களில் (திங்கள் - வெள்ளிவரை) மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை சங்க தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். (சி-9350)

தொலைபேசி இல:0212285752,
டிப்போ வீதி, கனகபுரம்,
கிளிநொச்சி.

பொது முகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்
கிளிநொச்சி



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 47 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/2144

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 23
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC/ விவசாய உத்தியோகத்தர்
தொ.இ: B/2146

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 23 சூரி செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/2154

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 20 சூரி செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/2156

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 49 செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: G/3243

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 42 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc/ ஆசிரியர்
தொ.இ: G/3245

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 28 1/4 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3248

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 78 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: G/3251

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அயர்லாந்துப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிறுவனத்தின் 10, 11ஆம் அணியினருக்கான பட்டமளிப்பு விழா


பேரருட் திரு
தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர்.



ஜேம்ஸ் பிறவுண் வேந்தர்,
அயர்லாந்து தேசிய
பல்கலைக்கழகம்.



அருட்பணி
எஸ்.ஜே. இராஜநாயகம்,
இயக்குநர், அகவொளி.



## இன்றைய நாளில் பட்டம் பெறுவோர் - 2012-2013 அணியினர்



T.கேதீஸ்வரன் | Fr.J. வின்சன் | J.ஜெயறூபி | A.ஜீவநந்தினி | S.உஷாந்தினி | G. கஜந்தா | T.சிந்துஜா



J. தட்சாயினி | A.பிருந்தா | T.சங்கமதி | A.உஷா | B.நித்தியா | M.ஜெயந்தன் | A.சுஜீந்திரன்


## 2013-2014 அணியினர்



V.கிருஸ்ணமீரா | T.இந்திரகுமார் | A.முகுந்தன் | N.நளினா | M.சிரோமி | M.மேனகா | Fr.C.கொட்வின்



V. டாழினி | K.கலைவாணி | Fr.S.பாலேந்திரன் | S.பிரம்மியா | T.தேன்மொழி | S.கார்த்திகா | R.வித்தியா



T.தட்ஷாயினி | N.விந்துஜா | S.தமிழரசி | J.ஜெகன் | R.பிரபாஜினி | B.பாமினி | M.றொசான்



Sr.நிஜாந்தினி | T.றெக்சினி | Bro.ஜெனிஸ்ரன் | N.ஜெரோட் | A.பிரசாந்தன் | N.றாபி | S.மாதங்கி




S. அனுசியா | S.சாரங்கி | J.கிருஷாந்தா | A.பெலிசியா | M.மதிருபன் | Sr.J.மரியமலர் | S.சுஜாதா

## வாழ்த்துவோர்: அகவொளி குடும்பமும் மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சதம் விளாசிய வோனர் இக்கட்டான நிலையில் இந்தியா





அடிலெய்டு டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சிலும் சதம் விளாசினார் அவுஸ்திரேலிய வீரர் வோனர். இன்னும் ஒருநாள் மீதமுள்ள நிலையில் போட்டியை சமநிலை செய்தாக வேண்டிய இக்கட்டான நிலை யில் இந்திய அணி உள்ளது. அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட "பார்டர் - கவாஸ்கர்" கோப்பைக்கான டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடிலெய்டில் நடக்கிறது. அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங் சில் 517/7 ரன்னுக்கு "டிக்ளேர்" செய்தது. மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கு 369 ரன்கள் எடுத்து, 148 ரன்கள் பின் தங்கி இருந்தது. ரோகித் சர்மா (33), சகா (1) அவுட்டாகாமல் இருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் மழையால் பெருமளவு பாதிக் கப்பட்டதை சரிக்கட்டும் வகையில் அரைமணி நேரம் முன்னதாக, நான்காவது நாள் போட்டி ஆரம்பமாகியது. முதல் 10 ஓவர்கள் தாக்கு ப்பிடித்த ரோகித், சகா ஜோடி நிதான ரன்கு விப்பை வெளிப்ப டுத்தியது. இந்நி லையில் லியான் சுழலில் தேவையில்லாமல் அடித்து ஆட முற்பட்ட ரோகித் சர்மா (43), விக்கெட் சரிவை ஆரம்பித்து வைத் தார். அடுத்து வந்த கரண் சர்மா (4) நிலைக்கவில்லை. சகா 25 ரன்னுடன் கிளம்பினார். வந்த வேகத்தில் இஷாந்த் சர்மா (0), லியான் சுழல் வலையில் சிக்கி னார். கடைசி நேரத்தில் ஆவேச ரன்குவிப்பை வெளிப்படுத்தினார் முகமது ஷமி (34). இவரது அதிரடி கைகொடுக்க, இந்திய அணி முதல் இன்னிங்சில் 444 ரன்னுக்கு ஓல் அவுட்டானது. வருண் ஆரோன் (3) அவுட்டாகாமல் இருந்தார். அவுஸ்திரேலிய அணி சார்பில் லியான் 5 விக்கெட் சாய்த்தார். முதல் இன்னிங்சில் பெற்ற 73 ரன்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்சில் களமிறங்கியது அவுஸ் திரேலிய அணி. கரண் சர்மா சுழலில் ரோஜர்ஸ் (21) வீழ்ந்தார். வாட்சன் (33), கிளார்க் (7) நீடிக்கவில்லை. மறுமுனையில் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்திய வோனர், டெஸ்ட் அரங்கில் 11ஆவது சதம் (102) கடந்து அவுட்டானார். மிட்சல் மார்ஷ் 40 ரன்கள் எடுத்தார். ஸ்டீவன் ஸ்மித் 9ஆவது அரைசதம் கடந்தார். நான்காவது நாள் ஆட்ட முடிவில், அவுஸ்திரேலிய அணி இரண்டா வது இன்னிங்சில், 5 விக்கெட்டு க்கு 290 ரன்கள் எடுத்து, 363 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தது. ஸ்டீ வன் ஸ்மித் (52), ஹாடின் (14) அவுட்டாகாமல் இருந்தனர். இன் னும் ஒருநாள் மீதமு ள்ள நிலை யில், இப்போட்டியை சமநிலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இந்திய அணி உள்ளது. போட்டியின் 5 ஆவதும் இறுதியுமான நாள் இன்றாகும். (க)

## சாதனை படைத்தார் மெஸ்ஸி



ஐரோப்பிய காற்பந்து தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் மெஸ்ஸி முதலிடம் பிடித்தார்.

ஐரோப்பிய காற்பந்து கிளப் அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடர் நடக்கிறது.

இதன் லீக் போட்டியில், பார்சிலோனா அணி 3:1 என்ற கோல் கணக்கில் பி.எஸ்.ஜி அணியை வென்றது.

பார்சிலோனா சார்பில் மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் தலா ஒரு கோல் அடித்தனர். பி.எஸ்.ஜி., அணிக்கு இப்ராஹிமோவிச் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

இப்போட்டியில் ஒரு கோல் அடித்த பார்சிலோனா வீரர் மெஸ்ஸி, ஒட்டுமொத்த ஐரோப்பிய தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தை ரியல் மாட்ரிட் அணியின் ஜாம்பவான் ராலுடன் பகிர்ந்து கொண்டார்.

இவர்கள் இருவரும் தலா 76 கோல் அடித்துள்ளனர். இப்பட்டியலின் மூன்றாவது இடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ (75 கோல்) உள்ளார். பார்சிலோனா அணிக்காக (375) அதிக கோல் அடித்தவர்கள் வரிசையிலும் முன்னிலை வகிக்கும் மெஸ்ஸி, சம்பியன்ஸ் லீக், (75 கோல்), லா லிகா (256) தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலும் முதலிடம் வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஆளுநர் வெற்றிக்கிண்ணம் ஆரம்பம்



வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ண த்துக்கான காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, புதன்கிழமை தெரிவித்தார்.

யாழ். பொது நூலகத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சுற்றுப்போட்டி, எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், இறுதிப்போட்டி ஜனவரி மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆரம்பம் மற்றும் இறுதிப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும், மிகுதி போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பாடும் மீன், சென். அன்ரனீஸ் விளை யாட்டுக்கழகங்களின் மைதானங்களில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள 9 லீக்குகளையும் சேர்ந்த 18 அணிகள் பங்குபற்றவுள்ள இந்த சுற்றுப்போட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு 1 இலட்சம் ரூபாயும், இரண் டாம் இடம்பெறும் அணிக்கு 50 ஆயி ரம் ரூபாயும் பரிசில் தொகையாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன், அதிக கோல் அடிக்கும் வீரர், சிறந்த கோல் காப்பாளர் ஆகியோர்களுக் கான விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக ஆளுநர் கூறினார். (க-23)

## இங்கிலாந்து வெற்றி.



இலங்கை அணிக்கு எதிரான 5வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்து - இலங்கை அணிகள் இடையிலான 5ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பல்லேகலவில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்களில் 239 ஓட்டங்களை எடுத்தது. அதிக பட்சமாக சங்கக்கார 91 ஓட்டங்களும், அணித்தலைவர் மத்யூஸ் 40 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் வோக்ஸ் 47 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலங்கைக்கு எதிராக இங்கிலாந்து பவுலர் ஒருவரின் சிறந்த பந்து வீச்சு இதுவாகும். பின்னர் பலத்த மழை கொட்டியதால் ஆட்டத்தை தொடர முடியவில்லை. இதையடுத்து விதிமுறைப்படி இந்த ஆட்டம் மாற்று நாளுக்கு தள்ளிவைக்கப்பட்டது.

அதன்படி இங்கிலாந்து அணி 240 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்கள் அணித்தலைவர் குக் (20), மொயீன் அலி (4) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

பின்னர் ஜோடி சேர்ந்த டெய்லர் (68), ரூட் அணியின் ஓட்டங்களை பொறுமையாக உயர்த்தினர். ரூட் சதம் விளாசினார். இது இவருக்கு 3ஆவது சதமாகும். பின்னர் களமிறங்கிய போபாரா (28), மொர்கன் (5) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

ரூட் கடைசி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றியடைச் செய்தார். இவர் 104 ஓட்டங்கள் குவித்தார். இதனால் இங்கிலாந்து அணி 49.1 ஓவரிலே இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் சேனநாயக்க 2 விக்கெட்டுகளையும், டில்ஷான், அஜந்த மெண்டிஸ், திசர பெரேரா தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சதம் அடித்த இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் இப்போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இலங்கை இங்கிலாந்து மோதும் 6 ஆவது ஒரு நாள் போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்குதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலாகும்.

—ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மைத்திரிபால சிறிசேனவை சரத் பொன்சேகாவுடன் ஒப்பிடலாமா?

தென்னிலங்கை முழுவதிலும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தடல்புடலாக நடந்து வருகிறது. வடக்கு கிழக்கு மாகாண மக்கள் இனத்தால் மட்டுமன்றி தேர்தல் பிரசாரத்திலும் சிறுபான்மையினர் என்பது காட்ப்படுகிறது.

இந்நிலையில் தமிழ் மக்களும் தம்மளவில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏதேவொரு முடிவை எடுப்பர். அந்த முடிவு மிகச்சிறந்த முடிவாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. நிலைமை இதுவாகவிருக்க, தேர்தல் பிரசாரம் கடும் சூடு பிடித்துள்ள வேளையில் வெற்றி யாருக்கு என்ற விவாதம், பிரதிவாதங்கள் நாடு பூராகவும் நடந்து கொண்டிருக்கின்றது.

அதிலும் குறிப்பாக அரச திணைக்களங்கள், பொது அமைப்புகளில் பணியுரிவோர் தமது ஓய்வு நேரத்தை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி யாருக்கு என்ற விவாத அரங்கை ஆரம்பித்து அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றனர். இவையெல்லாம் தேர்தல் காலங்களில் நடக்கக் கூடியவை ஆயினும், எதிர்வரும் 8-ம் திகதி நடக்கப் போகும் தேர்தல் முடிவு இந்த நாட்டில் பலத்த மாற்றங்களைச் செய்யும் என்பதால் அது தொடர்பான மக்கள் கருத்து முன்னெப்போதும் இல்லதவாறு விறுவிறுப்படைந்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்டவர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

தேர்தல் பிரசாரம் நடந்த போது, வெற்றி சரத் பொன்சேகாவுக்கே என்று கூறப்பட்டது. சரத் பொன்சேகா வெற்றியடையக்கூடிய வாய்ப்புகள் உண்டென்ற ஆதாரமற்ற கணிப்பை நம்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவையே ஆதரிக்கும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பு சரத் பொன்சேகாவுக்கு வெற்றியைத் தவிர; சிறைவாசம், பட்டம் பறிப்பு என்ற மிகப் பெரும் துன்பங்களை வருடக்கணக்கில் கொடுத்திருந்தது. அதுமட்டுமன்றி இனிமேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவை எடுக்குமளவில் அவர் மனத்தைரியத்தையும் இழந்தார்.

இன்னொரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால்... என்று நினைக்கும் போதெல்லாம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்து, பெறுபேறுகள் வெளியானபோது, தனக்கு நடந்ததை அவர் நினைத்துப் பார்ப்பார். அந்த நினைவு இன்று விட்டன் கொண்டலடி என்பதாக இருந்திருக்கும்.

இவை ஒருபுறமிருக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி என்ற விடயத்தில் மைத்திரிபால சிறிசேனாவை சரத் பொன்சேகாவுடன் ஒப்பிட்டு கருத்துரைப்பது சரியானதா? என்று கேட்டால் இல்லவே இல்லை என்பதே நம் பதிலாக அமையும்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தவர். அரசியல் என்பது அவருக்கு அப்பாற்பட்டது. அதே நேரம் அவரை தேர்தலுக்கு அழைத்து வந்தவர்கள் அவரின் வெற்றிக்காகப் பாடுபடவில்லை.

அதே சமயம் இராணுவத் தளபதியாக இருந்த ஒருவரை ஜனாதிபதி ஆக்கினால் ஜனநாயகம் படாப்பாடு படுமோ என்ற ஏக்கமும் தென்பகுதி மக்களிடம் ஏற்பட, சம்பந்தர் ஐயாவும்! பொறுத்த நேரத்தில் அதனைத் தெரிவிக்க, சரத்பொன்சேகாவின் வெற்றிதவிடு பொடியாகிற்று.

ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுபவர் மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர். அரசியலில் மிகுந்த அனுபவம். இது மட்டுமன்றி ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதை மிக இரகசியமாக மறைத்து வைத்திருந்தவர். இதுதவிர முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தீவிரமான ஆதரவுக்குரியவர்.

எனவே நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி யாருக்கென்பதை நிறுத்திட்டமாக கூறமுடியாவிட்டாலும், தேர்தல் முடிவில் சரத் பொன்சேகாவுடன் மைத்திரிபால சிறிசேனவை ஒப்பிடுவது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

சரத் பொன்சேகா ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிட்டபோது பௌத்திரமாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மைத்திரிபால போட்டியிடும் போது இரண்டாக உடைந்துபோயிற்று என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

# காணி அபகரிப்புக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்

## வடக்கு மாகாண எதிர்க்கட்சி ஆலோசனை

அரசியலமைப்பிற்கு முரணாக இராணுவத்தினர் பொதுமக்களின்காணிகளை ஆக்கிரமிப்புச் செய்தால் அதற்கெதிராக வழக்குத் தொடர வேண்டுமென வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

வடக்குமாகாணசபையின் 20 ஆவது அமர்வின் மிகுதிநேர அமர்வு நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணியளவில் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதில் உறுப்பினர் சி.சிவமோகனால் அரசியல் யாப்பிற்கு முரணாக இராணுவத்தின் காணி ஆக்கிரமிப்பிற்கு துணைபோன மத்திய அரசின் 1882/6 ஆம் இலக்க 2014.09.30 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரும் பிரேரணை முன்மொழியப்பட்டது. அப்பிரேரணையில்,

ஆயுத முனையில் இராணுவத்தினர் அத்துமீறி மக்களின் காணிகளுக்குள் மக்கள் இல்லாத நேரம் புகுந்து கொண்டமை ஜனநாயகமற்ற அடாவடிச் செயலாகும்.

காணி அபகரிப்புக்கென ஒரு அதிகாரியை இட்டு மக்களின் கருத்து அறியப்படாது எடுக்கப்பட்ட இந்நடவடிக்கை ஏற்கக்கூடியதல்ல.

மக்கள் நேரடியாக ஒரு தடவை பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி பிரதேச செயலாளருக்கும் மேதகு ஜனாதிபதிக்கும் மகஜர் கையளித்த பின்னரும் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது தவறானதாகும்.

காணி அபகரிப்புக்கு முன் வடமாகாண சபை காணி அமைச்சர் என்ற முறையில் வடமாகாண சபை கௌரவ முதலமைச்சரிடம் அவரின் விதப்புரை பெற்றிருக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்நடவடிக்கை இவ்விடயத்தில் கடைப் பிடிக்கவில்லை.

மேலும் காணி உத்தியோகத்தரோ, பிரதேச செயலாளரோ, காணி ஆணையாளரோ வடமாகாண சபைக்கு சிபாரிசு செய்து தெரிவிக்காது நேரடியாக செயற்பட்டிருந்தால் அரசியல் யாப்புக்கும் சட்டத்துக்கும் முரணானதாகையால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஏதுவாக வடமாகாண காணி அமைச்சை ஒரு நேரடி விசாரணை செய்து தெரியப்படுத்துமாறு இச்சபை கோருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணை தொடர்பில் உரையாற்றும்போதே அரசியலமைப்பிற்கு முரணாக காணி சுவீகரிப்பு இடம்பெற்றால் வழக்குபதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா தெரிவித்தார். (இ-4)

# அர்த்தமற்ற பேச்சுக்கள்மூலம் அழிந்து போனதை தவிர வேறு எதனை நாம் பெற்றுக் கொண்டோம்?

## வி.கே.ஜெகன் ஆதங்கம்

அகதிவாழ்வை விட்டு தமிழ் இனம் அகன்றுவிடக்கூடாது, அவர்கள் என்றுமே அடுத்தவர் உதவியை எதிர்பார்க்கும் இனமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சுயநலத்திற்காக தேசியம் பேசி பதவிகளைப் பெற்று மக்களை அடிமைப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் போல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது அரசியல் பயணம் ஒருபோதும் இருக்கப்போவதில்லை

அவரது ஒவ்வொரு அசைவும் மக்களுக்கானதாகவே நகர்த்தப்படுகின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வலி வடக்கு மாதர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு வலி வடக்கு இணை அமைப்பாளர் தீபன் தலைமையில் அண்மையில் தெல்லிப்பளை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர்விகே. ஜெகன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மூன்று தசாப்த கால யுத்த வடுக்களை மறந்து இன்றைய உலகிற்கு ஏற்ப பெண்களது விழுமியங்களும் சேவைகளும் முன்னிறுத்தப்பட வேணடும் என்ற நோக்கத்துடன் அவர்களது தோள்களை தட்டிக் கொடுத்து தூக்கி விடுவதற்காக உருவாக்கப்படுவது தான் இந்த மாதர் அமைப்பு.

இந்த அமைப்பிற்குள் உள்வாங்கப்படும் ஒவ்வொரு மாதர்களும் முழு மனதுடன் சமூகத்திற்காகவும் எதிர் காலத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்து செயற்படுவார்களானால் எமது பகுதியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள்பட்ட வேதனைகளும் மறக்க முடியாத தடயங்களும் மழுங்கடிக்கப்பட்டு புதிய பாதைக்கு எமது இனத்தை பரிணாமமடைய செய்ய முடியும். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சாரதாதேவியின் ஜெயந்தி விழா

யாழ்.இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் நடத்தும் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜெயந்தி விழா இன்று சனிக் கிழமை மாலை 4 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை மருதனார்மட வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஸ்ரீகலா ஜெகன்னாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# முடிபுகள் வெளியீடு

இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவையின் தெரிவுக்கான முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுச்சேவை ஆணைக்குழுவிலிருந்து அவர்களது தெரிவு தொடர்பான கடிதம் அவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

இச்சேவைக்கான தெரிவு 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கு பின் தற்போதே இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது (இ-5)

# ஆய்வு நூல் அறிமுக விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மா. அருண்சந்திரனின் யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் வரலாற்றுப்பதிவின் மறுபக்கம் ஆய்வு நூல் அறிமுக விழா இன்று சனிக் கிழமை மாலை 4 மணிக்கு கலைத் தூது கலையகத்தில் கொழும்புத்துறை புனித வளனார் அ.ம.தி குரு மடத்தின் அதிபர் வண.வ.செ.அன்புராசா அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ஆ. சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### மனதிலிருந்து விடுதலை

இது மனமே இல்லாத நிலையல்ல. மனம் என்பது நம்பிக்கைகள், நோக்கங்கள், சிந்தனைகள், சமுதாயக் கட்டுப்பாடுகள், பாதிப்புகள், பிள்ளைப்பராய முடிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மனதே நமது விருப்புகளுக்கு உட்படாது நமது வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது. ஆகவே நாம் முடிவையும் எடுக்க முடியவில்லை. இந்த மனதின் வட்டத்திற்கு வெளியில் எதையும் சிந்திக்க முடியவில்லை. ஆகவே, நாம் நமது சொந்தச் சிறையிலேயே அடைபட்டு விடுகிறோம். மனதிலிருந்து விடுதலை என்றால் மேலே கூறப்பட்டவைகளின் கட்டுப்பாட்டில் இனியும் நாம் இல்லை. மாறாக நாமே அவற்றைக் கட்டுப்படுத்துகிறோம். இந்த விடுதலை மிகப் பெரியதொரு சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## காலம் கைகொடுக்கும்



❖ பயத்தை அகற்றி விட்டு, அதற்கு அப்பால் நீ சென்று விடு. இன்று முதல் அறவே பயமற்றவனாக இரு.

❖ உன்னால் சாதிக்க முடியாத காரியம் ஒன்று இருப்பதாக ஒருபோதும் எண்ணாதே.

❖ கொள்கைக்காக உன்னை அர்ப்பணிக்கக் கற்றுக்கொள். பொறுமையுடன் முயற்சித்தால் உனக்கு ஆதரவாக காலம் கைகொடுக்கும்.

❖ தனி மனித வாழ்வு து?ய்மையாக இருந்தால், உலக வாழ்வும் தூய்மையாகி விடும்.

❖ கடவுளுக்குச் சமமான நல்லவர்கள் இன்னும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. கடற்பகுதியில் நுழையும் இழுவை படகுகளை தடை செய்யக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு





(முள்ளியவளை)

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்து மீறி உள் நுழைந்து சட்ட விரோதமான முறையில் தொழில் செய்யும் இந்திய- இலங்கை மீனவர்களின் இழுவை படகுகளை முற்று முழுதாக தடை செய்யுமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரும் முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர்சம்மேளனத்தினரும்இணைந்து நேற்று முற்பகல் 10 மணியளவில் ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். ஊர்வலம் முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தில் ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைசென்றடைந்தது.

இவ் ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிப் பிடித்தவாறு சென்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து முல்லை. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.மோகன்ராஜிடம் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசாவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

அம் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளவிடயங்கள்வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் 26 சங்கங்களும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் 26 கிராமிய அமைப்புக்களுமாக மொத்தம் 52 அமைப்புக்களுள்ளன. இவ் 52 அமைப்புக்களிலும் மொத்தமாக 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இக் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலின் போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பல மட்டங்களிலும் எமது மாவட்டத்தின் பாரிய அமைப்புக்கள் இரண்டும் கருத்துப்பரிமாற்றங்களை கலந்துரையாடல்களை கூட்டங்களின் போது வேண்டுகோள்களை கொடுத்து வந்தமையும் எம்மால் சுட்டிக்காட்டத்தக்கதொன்றாகும்.

எமது கடற்பரப்பில் அரச சட்டரீதியான ஏற்றுக்கொள்ளப் பட்ட குறைந்தளவு குதிரை வலு கொண்ட வெளி இணைப்பு இயந்திரங்களை பயன்படுத்தி மீன்பிடி தொழிலுக்கு செல்லும் சந்தர்ப்பத்தில் இந்திய-இலங்கை மீனவர்கள் பாரிய இழுவை படகுகள் பயன்படுத்துதல் சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டதொன்றாகும்.

இப்பாரிய இழுவைப் படகுகளின் செயற்பாட்டால் எமது வலைகள் அறுத்து சேதப்படுத்தப்பட்டு நாம் வெறும் கையுடன் வீடு திரும்பும் அவல நிலையே தொடர்கின்றது.

இதனால் எமது ஜீவனோபாயத்தில் பெரும் கஷ்ட நிலையை உருவாக்கி வருகிறது. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், அபிவிருத்திகூட்டங்கள், அமைச்சர் ஆகியோருக்கு தெரியப்படுத்தினோம்.

தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் எமது மக்களின் வாழ்வாதார பிரச்சினையான இவ் விடயத்தை முன்வைத்திருந்தோம்.

இறுதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பார்வைக்கு எமது விடயம் கொண்டு செல்லப்பட்ட போது, ஜனாதிபதி உடனடியாக கடற்படை உயரதிகாரிக்கு பணிப்புரை விடுத்து சட்ட விரோதமாக செயற்படும் இழுவைப்படகுகளின் அத்து மீறல்களை நிறுத்தும்படியும் கூறினார்.


ஆனால் இதுவரை எது வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை.

இப்போது எமது கடற்றொழில் பரப்பினுள் 100 இற்கும் மேற்பட்ட இந்திய-இலங்கை இழுவைப் படகுகள் அத்து மீறி சட்டவிரோதமான செயலை செய்து கொண்டு இருப்பதை அன்றாடம் காணக் கூடியதாக வுள்ளது.

அத்துடன் தடை செய்யப் பட்ட சுருக்கு வலைப் பயன் பாடு, கடலட்டை பிடித்தல், வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல், கணவாய்க்கு பந்தை வைத்து பிடித்தல்,டைனமெற் மூலம் மீன்பிடித்தல் போன்ற செயற்பாடுகளிலும் இந்திய-இலங்கை மீனவர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இறால் தொழிலுக்கான மாதம் ஜனவரியாகும். அடுத் தாண்டில் இறால் தொழில் கூட எமக்கு இல்லாது போய்விடுமோ என தொழிலாளர்கள் ஏங்குகின்றனர்.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமது மாவட்டத்தில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்கக் கூடிய விதத்தில் எமது மாவட்டத்தில் அத்து மீறி உள் நுழைந்து சட்ட விரோதமான மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய-இலங்கை மீனவர்களின் இழுவைப்படகுகளின் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தி எமது மாவட்ட மீன்பிடித் தொழில் பரப்புகளில் மீனவர்கள் சட்ட நடவடிக்கைக்கு ஏற்ப தமது மீன்பிடித்தொழிலை மேற் கொள்ள வழி சமைத்துத் தருமாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-300)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தேவிபுரம் ஆ பகுதியிலுள்ள முருகன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள வீடொன்றின் வளாகத்தில் நின்ற பனை மரத்தில் ஒரு மூழில் இரு பனம் பழங்கள் உண்டாகி இருப்பதைப் படத்தில் காணலாம்.

## களவாடப்படும் மாடுகள் வெட்டப்படுகின்றன

### உரிமையாளர்கள் கவலை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் மாடுகள் களவாடப்பட்டு சட்ட விரோதமான முறையில் வெட்டப்படுவதாக பாதிக்கப் பட்ட உரிமையாளர்களினால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, கரியாலை நாகபடுவான், கிராஞ்சி ஆகிய கிராமங்களிலேயே அதிகளவான மாடுகள் மேய்ச்சல் தரைகளில் இருந்து களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதாக உரிமையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இறைச்சிக்காக சட்ட விரோதமான முறையில் களவாடப்படும் மாடுகள் குளக் கரைகளிலும் [illegible] பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் கொல்லப்பட்டு இறைச்சி துண்டுகளாக்கப்பட்டு கடைகளிலும் உள்ளூரிலும் விற்பனை செய்யப்படுவதாக உரிமையாளர்களால் சுட்டிக்காட்டப் படுகின்றது.

அத்துடன் கொல்லப்படும் இடங்களில் எலும்புகள் கிடப்பதால் அவற்றிலிருந்து துர் நாற்றம் எழுவதாக தெரிவிக் கப்படுகின்றது.

இறைச்சிக்காக வெட்டப் படும் மாடுகள் கொல்களத்தில் அல்லது பொது இங்களில் மக்கள் பார்வைக்காக மூன்று தொடக்கம் ஏழு நாட்கள் வரை கட்டப்பட்டிருக்க வேண்டும். அதன்பின்னரே இறைச்சிக் காக வெட்டப்பட வேண்டும்.

அத்துடன் களவாடப்பட்டு வெட்டப்படும் மாடுகள் அதிகாரிகளின் அனுமதியின்றியே கொல்லப்படுவதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் களவாடப்படும் மாடுகள் சட்ட விரோதமாக இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடை செய்ய வேண்டுமென உரிமையாளர்களினால் கோரிக்கை விடப் படுகின்றது. (2)




## நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

வவுனியா நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக நகர சபையின்செயலாளர் க. சத்திய சீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா நகரசபையின் 2015 ஆம் ஆண்டுக்கான பாதீடு எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

எமது அலுவலக நேரத்தில் இப் பாதீட்டை மக்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்க முடியும் என்பதுடன் தமது ஆட்சேபனைகளையும் தெரிவிக்க முடியும் எனவும அவர் தெரிவித்தார்.(2-250)

## பாம்புக்கடிக்கு இலக்காகிய 263 பேருக்கு சிகிச்சை

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 263 பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றதாக மாவட்ட வைத்தியசாலையின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், கட நந்த 2013 ஆம் ஆண்டில் 530 பேரும் 2012 ஆம் ஆண்டில் 283 பேரும் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றனர்.

இதேவேளை, விபத்துக்களில் படுகாயமடைந்த 430 பேர் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சிகிச்சை பெற்றதுடன், இந்தத் தொகை 2013ஆம் ஆண்டு 797 பேராகவும் 2012ஆம் ஆண்டு 662 பேராகவும் இருந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அபகரிக்க...

பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

இக்காணிகள் கடந்த 1980 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழர்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுக்கு ஆதாரமாக காணி உத்தரவுப் பத்திரத்தை வைத்திருக்கின்றனர்.

அக்காணிகளை மீட்டுத்தருமாறு கோரி சுமார் 600 குடும்பங்கள் தமது காணிப்பிரச்சினை தொடர்பாக விண்ணப்பித்திருக்கின்றனர். இதற்கு எதுவித தீர்வும் அம்மக்களிற்கு பெற்றுக்கொடுக்கப்படாமல் குறித்த பிரச்சினை தீர்வுகாணப்பட்டதாக அறிக்கையை மாற்றியமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணியற்றவர்களாக பதிவு செய்த 3000 தமிழ்மக்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாணப்பட்டதாக அறிக்கையை மாற்றியமைக்கவும், சகல பிரதேச செயலாளர்களிற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அனைத்து அறிக்கைகளும் இவ் வருட இறுதியில் காணி அமைச்சால் ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்பிக்கப்படவுள்ளது எனவும் தகவலறிந்தவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின பரிந்துரையின்படி யுத்தகாலத்தில் தமது காணிகளை அல்லது ஆவணங்களை இழந்த மக்களுக்கு தீர்வை பெற்றுத்தருவதற்காக நடைபெறும் 2 வருட வேலைத்திட்டத்தின் இறுதிமாதமான இம்மாதத்தில் இது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் தமிழர்களுக்கு பாதகமான இரண்டு முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு மாகாண காணி ஆணையாளர் பிரதேச செயலாளர்களிற்கு மேற்படி உத்தரவிட்டுள்ளார் என்று அறிய முடிகின்றது. (செ-6)

## ஊடக அமை...

பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்களும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு செயலாளர், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துகின்றார் என்று கோஷம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் ஆகியவற்றுக்கு எதிராக எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு கோஷம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளை நிறுத்துமாறும் கேட்டுக் கொண்டனர். சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட ஐந்து ஊடக அமைப்புகளும் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பதுளையில்...

வெளியேறியுள்ளனர்.

இந்தநிலையில் அவர்களை சுமார் 6 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள புதுக்காடு என்ற இடத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக தோட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த நடுக்கத்தின் போது எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த தோட்டத்தில் ஏற்கெனவே மண்சரிவு தடயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் புவிசரிதவியல் திணைக்களம் நேற்றும் இந்த இடத்தை அபாயமிக்க இடமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு அல்பிறட்



சென்.செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அல்பிறட் 11.12.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பிரகாசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் றோஸ் குயினின் அன்புக் கணவரும், அமரர் சிமியோன், ஞானஉதயம், திருச்செல்வம் (ஜேர்மனி), எட்விசம்மா (ஜேர்மனி), சிறிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜாதா, அமரர் றுஸ்கின், சல்பிகா (இந்தியா), சாள்ஸ், டெனிசன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதீஸ்வரன், ரவிக்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், சுதர்சிகா, ஜெஸ்ரின், றீகன், சுலக்ஷனா, மதுஸ்ரன், மெலீனா, சரோன் (இந்தியா) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் கொட்டைக்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0774832514, 0776590751 இ

தகவல் :
- குடும்பத்தினர்

## கணேசன் விஜயன்



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை பங்குரு வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணேசன் விஜயன் அவர்கள் நேற்று (12.12.2014) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசன் மற்றும் மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதியின் அன்புப் பேரனும், பிரகலாதன், சிறிலசிறி, விஜயசிறி (அவுஸ்ரேலியா), றஜிதசிறி, பிரதீபன், விஜிதசிறி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தினி, விமலன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரியங்கா, பிரியங்கன் ஆகியோரின் மாமனாரும், பிரணவனின் சித்தப்பாவும், தியாகராஜா சுசிலாதேவியின் அன்புப் பெறாமகனும், நவநீதன் (லண்டன்), காயத்திரி, கோபிநாத், பிரசன்னா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்குரு வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்

(சி-9366)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### வாடகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய, நடுத்தர வீடுகள்/கட்டடங்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 31.12.2014 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

-பதிவாளர்

(சி-9358)

### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இலங்கை.

செய்முறைப் பரீட்சை (சங்கீதம் / நடனம்)

- இசைமாணி/நடனமாணி - 1-ம், 2-ம், 3-ம் மற்றும் 4-ம் வருடத்தேர்வு
- கலைமுதற் தேர்வு - 2011
- பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி - I - 2011
- பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி - II - 2011

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீதம் மற்றும் நடன பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 22.12.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் ஏற்கெனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகள் ஏற்கெனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

-பதிவாளர்
12.12.2014

(சி-9355)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்து நிறுத்த...

தளபதி அனுர சுபசிங்க, காணி அமைச்சர், காணி சுவீகரிப்பு அதிகாரி ஆகியோரை எதிர் வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நீதிமன்ற த்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடவும் நீதிமன்றம் பணித்தது.

மேற்படி, 52ஆவது டிவிஷன் அமைக்க ப்பட்டுள்ள 52 ஏக்கர் நிலமும் தனித் தென் ணம் தோட்டக் காணியாக இருந்தது. ஒரு தாய க்கும் நான்கு மகள்மாருக்கும் அது சொந்த மானது. அந்தக் காணிக்குள் புகுந்த படையி னர் அங்கிருந்த தென்னந்தோட்டத்தை அழி த்துவிட்டு அங்கு டிவிஷன் படையணியின் தலைமையகத்தை அமைத்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தற்போது அந்தக் காணியைச் சுவீகரிப்பத ற்கான சட்ட நடவடிக்கைகள் அரசுத் தரப் பால் ஆரம்பிக்கப்பட்டமையை அடுத்து காணி உரிமையாளர்கள் அதனை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனு செய்திருக்கின்றார்கள். பொதுத் தேவைக்காகத் தனியார் காணிகளை அரசு சுவீகரிக்க முடியும் என்ற சட்ட ஏற்பாட்டை மேற்கோள் காட்டியே இந்தச் சுவீகரிப்பு நட வடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. நேற்று வெள்ளிக்கிழமை இந்த மனு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு தலைமை நீதியரசர் விஜித மலகொட, நீதி யரசர் டிலிப் நவாஸ் ஆகியோர் முன்னிலை யில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர் தரப்பில் சட்டத்தரணிகள் கே.சயந்தன், லூயி கணேசநாதன் ஆகியோரின் அனுசரணை யுடன் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதாடினார்.

"பொதுத் தேவைகளுக்கு தனியார் காணியைச் சுவீகரிக்கலாம்" என்றாலும் இராணுவத்துக்குத் தேவையான ஒன்றை "பொதுத் தேவை" என அர்த்தப்படுத்த முடியாது என்று அவர் விளக்கினார். அத னைச் செவிமடுத்த நீதிமன்றம், மனுவை விசார ணைக்கு ஏற்று, எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டது. (செ-11)


## தேவை

மிக்ஷர் பொதிகள் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. (மானிப்பாயை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும் பத்தக்கது)

தொடர்புகளுக்கு : 0212255278
0777725582
(8712)


# இரணை...

அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடுக்குளத்தை நம்பி விவசா யம் மேற்கொள்ளும் விவசாயிகள், தங்களது தேவைகளுக்குப் போதிய நீர் இல்லாத நிலையில் இரணைமடுவில் இருந்து யாழ்ப்பா ணத்துக்குக் குடிநீர் எடுத்துவருகின்ற மத்திய அரசின் நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபை யின் திட்டத்துக்குத் தங்கள் கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டி வருகின்றார்கள். இதற்குத் தொலைநோக்குள்ள புத்திஜீவிக ளும் ஆதரவு தெரிவிக்காத நிலையில், இத்திட்டத்துக்குக் கடனுதவி செய்யும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் நாம் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தோம். நீர் வழங்கல் வடிகால் அமைச்சுக்கும் இதனைத் தெரியப்படுத்தியிருந்தோம்.

எமது கோரிக்கைகளை ஏற்று, இரணை மடுக்குள அணைக்கட்டைப் புனரமைக்க எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் நிதி ஒதுக்கீடு செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. புதி தாக மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தில், இர ணைமடுவில் இருந்து யாழ்ப்பா ணத்துக்குக் குடிநீர் எடுத்து வருவதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்திலேயே கடல் நீரில் இருந்து குடிநீரைப் பெறுவதற்கான திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. மருதங்கேணி கடற்பகுதி இதற்கான இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, ஆசிய அபிவிருத்தி வங்கி சுன்னாகம் பிரதேசத்தில் குடிநீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பதையும் கருத்தில் எடுத்து ள்ளது. இது தொடர் பான ஆய்வுகளு க்கும், சுத்திகரிப்பு முறைகளுக்கும் நிதியை ஒது க்கியிருப்பதோடு, கடல்நீரினைக் குடிநீராக்கி வழங் கும் திட்டத்தின் கீழ் நீர் பெறும் இடங்களில் ஒன்றா கச் சுன்னாகத்தை யும் உள்ளடக்கியு ள்ளது மத்திய அரசின் நீர்வழ ங்கல் மற்றும் வடிகால் அமை ச்சும் இதனை ஏற்றுக் கொண்டு ள்ளது. இரணை மடுவைப் புனரமைத்தல், கடல்நீரைக் குடி நீராக்குதல், யாழ்ப் பாணம் மாநகர எல்லைக்குள் கழிவகற்றும் வசதி களை ஏற்படுத்தல் ஆகிய மூன்று திட்டங்களுக்கும் மொத்தமாக 390 மில்லியன் அமெ ரிக்க டொலர்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்தத் தொகை பழைய திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் இரட்டிப்பு மடங்கு. இதில் பெரும் பங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழ ங்க முன்வந்துள் ளது என்றும் தெரி வித்துள்ளார்.(செ-11)


## கலையின் உயரம் வாழ்வின் சிகரம்.

தொழில்முறைக் கலைஞராவதற்கு இதோ!
ACT4 நிறுவனத்தின் ஓர் அரிய வாய்ப்பு.
அரங்க ஆற்றுகைக் கலைக்கூடாக சமூக விருத்திக்குப் பங்களிக்க முனைப்புள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இணைவதற்கு இடமுண்டு.

**வேலைத்திட்டத்தின் அடைவு**

- தேர்ச்சியுடைய வளவாளர்களின் பயிற்சி.
- நாடக அரங்கக் கலை நிகழ்வுகளில் பங்கேற்பு.
- கொடுப்பனவுகளுடன் கலைப்பணியாற்றுதல்.
- பயிற்றப்பட்ட உயர்நிலைக் கலைஞராக உருவாதல்.

பயிற்சிக்காலத்தில் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் உண்டு. தன்னம்பிக்கையும், ஆர்வமும் உடையவர்கள் இன்றே இணையலாம்.

15.12.2014 அன்று பி.ப. 2.00 மணியளவில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் தெரிவு இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கே இடமுண்டு.
உடனடியாகத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தொ.பே.இல. : 0717871301 / 0777178145

Act4
(C-9354)


# அரசிலி...

க்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக தனது நிலைப்பாட்டை பொது பல சேனா இன்னமும் தெளிவாக அறிவிக்கவில்லை. அவ்வாறு பொது பல சேனா நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு வழங்கினால் நான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகிடுவேன். கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலின் போது நான் தலை யிட்டதால் மற்றுமொரு கறுப்பு ஜூலையைதடுக்க முடிந்தது. எனவே இதனை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும் என்றார். (செ-11)


## இறுதிச்சந்தர்ப்பம்

**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**

**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்** கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர் கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவ னங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 14 டிசம்பர். புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற் கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்ட ணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங் கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(C-9363)



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப

- French, Italian ; English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசர ணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy** அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-9357)





## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியின் 81 வெளிக்களப் பணியாளர்களுக்கு கௌரவ முன்னாள் மேயர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி அவர்களின் முயற்சியால் கௌரவ அமைச்சர் திரு.டக்ளஸ் தேவானந்தா, கௌரவ வட மாகாண ஆளுநர் திரு.சந்திரசிறி அவர்களால் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கு அமைய முதற்கட்டமாக 14 பணியாளர்களுக்கு 11.12.2014 அன்று உந்துருளி வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

அகில இலங்கை
அரசாங்க பொது ஊழியர் சங்கம்.
(C-9364)



## FALC FRENCH LANGUAGE CENTRE
## REGISTERED FRENCH CENTRE.

# FRENCH வகுப்புக்கள்

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates in French... France, Canada, Belgium, Swiss செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 865 மாணவர்கள் French கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த DELF A1 Exam இல் எம் நிறுவன மாணவர்களே அதிகமானோர் தோற்றி 100% சித்தியடைந்தனர்...
அவர்களது புள்ளிகளை யாரும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்...
போலி ஆசிரியர்களிடமும் சென்று ஏமாந்தவர்கள் இப்போது எம்மிடம் இணைந்து கல்வி கற்கிறார்கள்...



No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, Main Street, நெல்லியடி | 021 320 2973 0779 789 456

புதிய பிரிவுகள் விரைவில்.. உடன் அனுமதியை பெறுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.